பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி.

காரியாலயம் :
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

வருஷ சந்தா: உள்நாடு ரூ. 3. வெளிநாடு ரூ. 5.

மாலை 8	SEPTEMBER 1942, சித்திரபானு௵ புரட்டாசி௴	முத்து 3

பொருள் அட

				பக்கம்
1	போகிற போக்கில்	....		98
2	உழவர் புகழ்	....	அ. ஆறுமுகம்	99
3	அரிசி	....		100
4	பாரதி நினைவு	....		1[illegible]
5	ரோஜா	....	கோவிந்தசாமி	10[illegible]
6	மாலை உலா	....	இரா[illegible]புரம் ரமணி	108
7	சிதம்பரநாத முதலியார்	....	[illegible]. ஸே.	109
8	ஏமாற்றம்	....	ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்	112
9	ஞானோதயம்	....	‘ராமன்’	116
10	முதலாளியின் டயரி—சில இதழ்கள்	....	‘சௌஹான்’	121
11	எருமை கண்ட கனவு	....	ய. மகாலிங்க சாஸ்திரிகள்	130
12	யுக்தி பலித்தது	....	‘கீரன்’	132
13	கடவுள் மாமா	....	சீகாழி மணி	134

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

போகிற போக்கில்



தற்கால அரசியல் நெருக்கடி நீடித்து நிற்கும் வரையிலும் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் (வேலியே பயிரை அழிக்கும் சட்டம்) கீழ் மவு[illegible]த்மா காந்தி காவலில் வைக்கப்பட்டு வரும் வை[illegible]லும் 'போகிற போக்கில்' அரசியல் சம்[illegible]ள்ள விஷயங்களை எழுதுவதில்லை எ[illegible]ானித்திரு[illegible]றேன்.

ப[illegible]த மணியின் அரசியல் நாக்கு [illegible]யேச்சையை இழந்து சுருண்டு கிடக்கிறது.

காவிரிப்பூம்பட்டினம்,
15—9—42

'மணி'

உழவர் புகழ்

எண்சீர்க்கழிநெடிலடிச்சந்த விருத்தம்
(தலைமகள் பாங்கியொடு கூறல்)

காகங்கள் கரைந்தொலிக்கும் வைகறையில் எழுந்து
களிப்புடனே வயலகத்து ஏருடனே அடைந்து
*மாகம்வாழ் கதிரவனும் மேற்றிசையில் மறையும்
பொழுதளவும் வேர்வைசிந்த உழைத்ததன்பின் உழவோர்
வேகமாய் மாடுகளோ டாடுகளை மடக்கி
கூண்டுகளில் போக்கியபின் வீடடைந்து குளித்து
பாகங்கொள் கூழ்குடித்தே திருப்தியுடன் துயில்வர்
மன்னவரும் பெறரிந்த மனவமைதி தோழி.

வண்டுமொய்க்கும் மலர்நிறைந்த கொடிபடரும் பொழிலில்
வயலெங்கும் பயிரோங்கும் கண்கவரும் இடத்தில்
தண்ணெனவே காற்[illegible] புலர்காலை பொழுதில்
உழவரெல்லாம் ஏர்தாங்கி நடந்தடைவர் இன்பம்
கண்மணியாம் உழும்பணியால் கிராமத்தில் அவர்கள்
பெறுமின்பம் மன்னவரும் புரவலரும் பிறரும்
மண்ணிறைந்த திரைகடல்சூழ் இவ்வுலகந் தன்னில்
பெறுவாரோ? சொல்வாயென் உயிர்க்குயிராந்தோழி.

குயில்முதலாம் பல்பறவை பறந்தொலிக்கும் பொழிலில்
தீங்கனிகள் அவருழைப்பின் பயனென்ன பழுக்கும்
பயிர்வகைகள் வயலெங்கும் பச்சைபசேல் எனவே
வளர்ந்தோங்கி தானியங்கள் வளமோங்கி விளையும்
எயில்பொருந்தும் நகரத்தார் அவையுண்டு வாழ்வார்
உயிரோம்பும் அவர்பணியே உயர்பணியாம் மாதே
மயில்பொருவும் எழில்நங்காய் பிறர்செய்யும் பணிகள்
தொழுதுண்ணும் பணிகளென்று ஓர்ந்திடுவாய் தோழி.

*மாகம்—ஆகாயம்.

அ. ஆறுமுகம்

அரிசி

[அகில இந்திய கிராமத் தொழிற் சங்கத்தார் வெளியிட்டது]

ஆ. வே. ஜெயராமன் (தமிழ்ப்படுத்தியவர்)

அத்தியாயம் 5. (தொடர்ச்சி)

(15) புழுங்கலும் பச்சையும்

	புழுங்கல்	பச்சை
பாஸ்பரஸ்	·15	·11
கால்ஷியம்	·01	·01
இரும்பு	2·2	1.0
வைடமின் 1. B	60	20

(16) மட்டரக அரிசியே உயர்ந்தது

உயர்தரக அரிசியும் தும்பைப்பூ போன்ற வெளுத்த அரிசியும் உண்பது நாகரீகமாய்விட்டது. இந்த அரிசி அதிகவிலைமட்டுமல்ல, மட்டரக அரிசியில் இருப்பதுபோல அதிகசத்துக்கள் உடையதல்ல. மட்டரக அரிசியை நாகரீகபணக்காரர்கள் வெறுக்கிறார்கள். உயர்ந்தரக அரிசியில் இருப்பதைவிட இந்த மட்டரக அரிசியில் மூன்று மடங்கு அதிக இரும்புசத்து [illegible]ாது.

மட்டரக அரிசியை உண்ணுங்கள். உயர்ந்தரக அரிசியைவிட இது அதிக ருசியுள்ளது.

(17) களைவதும் சமைப்பதும்

மெருகு கொடுத்த அரிசியைவிட மெருகுகொடாத அரிசி பதமாக நேரம் பிடிக்கும். ஆகையால் சமைப்பதற்குச் சிறிது முன்னதாகவே போதுமான தண்ணீரில் மெருகுகொடாத அரிசியை ஊற வைக்கவேண்டும். இவ்விதம் செய்வதால் விறகும் கரியும் அதிகம் செலவழியாது. இரும்பு, பாஸ்பரஸ் உப்புகளும், வைடமின் 1 B யும் தண்ணீரில் கரைந்துவிடும்.

ஆகையால் அரிசியை அதிகம் களையக் கூடாது. போதுமான அளவு தண்ணீரைக்கொண்டுதான் உலைவைக்கவேண்டும். இவ்விதம் செய்வதால் கஞ்சி சேதமடையாது.

அரிசியை மூன்றுதடவைகள் களைவதாலும், அதிக தண்ணீர்வைத்து அதனால் கஞ்சி வடிக்கட்டுவதாலும் 75 சதவிகித இரும்பும், 50 சதவிகித பாஸ்பரஸும், 50 சதவிகித வைடமினும் வீணாகின்றன.

சிறந்த உணவுகளான இச்சத்துக்களை வீணாக்குவது பெரிய நஷ்டமே.

(18) தவிடு

மு[illegible]ம் குத்திய அரிசியின் மெல்லிய மேல்தோலும் சேர்ந்ததுதான் தவிடு. மெருகுகொடுத்த அரிசியை உண்டால் இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமை.

தவிட்டில் உள்ள சத்துக்கள்

	சத்துவிகிதம்
1. கால்ஷியம், இரும்பு, பாஸ்பரஸ் முதலியன	8·7
2. புரோடீன்கள்	19
3. கொழுப்பு	20

மெருகுகொடுத்த அரிசியை உண்டால் தவிட்டையும் உபயோகிக்க முயற்சி செய்யுங்கள்.

(19) அரிசியுடன்....

அரிசியே ஜீவ உணவாக ஏற்றுக் கொள்கிறவர்கள், அதனுடன் பால், கீரை, பழம் முதலியவைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். மெருகுகொடுத்த அரிசியில் இல்லாத சத்துக்களை இவைகளில் பெறலாம்.

உப்புசத்துக்கள் இல்லாத உணவினால் எலும்பு அழிவும், பலவீனமும், பல் சொத்தையும், ரத்தசோகையும், அஜீர்ணமும், சம்பவிக்கும்.

(20) வைடமின் A பெறுவதற்கு

வைடமின் A குறைவினால் வளர்ச்சியின்மையும், கண்வியாதியும், இருமல் வியாதியும், மயக்கமும், மூத்திரப்பையும் சதைவளர்ச்சியும் சம்பவிக்கும்.

அரிசியில் இந்த வைடமின் அதிகமில்லை. அதனால் இதைப்பெற பால், வெண்ணெய் அல்லது நெய், கீரை, முட்டை, மீன் எண்ணெய், முதலியவைகளும் சாப்பிடவேண்டும்.

(21) அரிசியிலுள்ள கால்ஷியக் குறைவுக்கு

எலும்பும், பற்களும் வளர்வதற்கும், இருதயம் சரியாக வேலைசெய்யவும், தேகத்தில் வெட்டுக்காயம் ஏற்பட்டால் அதிக ரத்தம் சேதமாகாமல் தடுக்க உறைந்துபோகவும், கொழுப்பையும், இரும்பு உப்புகளையும் ஜீரணப்படுத்தவும், இந்த கால்ஷியம் உதவியாக இருக்கிறது. போதுமான அளவு பாலும், தயிரும், பருப்புகளும், பழங்களும், கீரைகளும் உண்டால் தேக வளர்ச்சிக்குப் போதுமான கால்ஷியம் கிடைக்கும்.

(22) உலோக உப்புகளுக்கு கீரைவகைகள்

தேகம் 25-ல் ஒருபாகம் உலோகம் உப்புக்களாலானது. ரத்தமும், தசைகளும், மூளையும் நீர்களும் புளித்துப்போகாமலும், திராவகமாகாமலும் இந்த உப்புகள் பாதுகாக்கின்றன. ரத்தம் சிறிது திராவகரூபமானால் தேக அசௌக்கியமுண்டாகும். மரணம் நேரிடும்.

இருதயம் சரியானபடி அடித்துக் கொள்ள இந்த உப்புகள் உதவுகின்றன. அவைகளில்லாவிட்டால் தசையில் தண்ணீர்ப்பசையிராது. மூத்திரப்பை சரியானபடி வேலைசெய்யாது. அவ்வப்போது தேகத்தில் உண்டாகும் மலங்களும் அசுத்தங்களும் வெளிவரா; ஜீரணமும் ஆகா.

(23) அரிசி உணவில் க்ஷாரம் (Alkali)

கீரை, கிழங்கு, பழங்களில் இந்த க்ஷாரம் (alkali) சத்து நிறைய இருக்கிறது. அரிசியிலும், பருப்புவகைகளிலும் திராவகசத்து இருக்கிறது. ஆதலால் அரிசியே உண்பவர்கள் நிறைய கீரைகளையும், கிழங்குகளையும், பழங்களையும் உண்ணவேண்டும்.

(24) வைடமின் 'C'

தேகத்தில் வைடமின் 'c' குறைவாக இருந்தால் ஈறுகள் புண்ணாகும், எலும்பையும், பற்களையும், வயிற்றையும் வைடமின் c ஆரோக்கியத்துடன் வைக்கிறது. தேகத்தை விஷக்கிருமிகள் பற்றிக் கொள்ளாமலிருக்க ஆரோக்கியக்கிருமிகளுக்கு (microbes) இது உணவாகிறது.

அரிசியில் இந்த வைடமின் இல்லாததால் வேறுவகையில் நாம் இதை அடையவேண்டும். காய்கறிகளிலும், கீரைகளிலும், பழங்களிலும் இந்த வைடமின் நிறைய இருக்கின்றது. அதிக உஷ்ணத்திற்கு இது தாளாது; வைடமின் அணுக்கள் சிதைந்துவிடுகின்றன. ஆதலால் இதுசம்பந்தமான பொருள்களை அதிகம் சமைப்பது கூடாது.

காய்கறிகளும், பழங்களும் இல்லாத இடங்களில், தானியங்களைத் தண்ணீரில் ஊறவைத்து முளைக்கவைத்து, முளைத்த தானியத்தை அப்படியே உண்ணலாம். அல்லது இரண்டு நிமிஷம் சூடுகாட்டிவிட்டு உண்ணலாம்.

(25) அரிசியும் பருப்பும்

பருப்புகளில் வைடமின் B இருக்கிறது. அரிசி 5 பாகம் உண்டால் பருப்பு

ஒருபாகம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனல் தினசரி 4 அல்லது 5 அவுன்ஸ் அளவுக்குமேல் பருப்பு உண்ணக் கூடாது.

(26) சரியான அரிசி உணவு

ஒரு நாளைக்கு ஒருமனிதனுக்கு அவுன்ஸ் கணக்கில்.

உணவு	எடுத்துக் கொள்ளும் நிறை	எடுத்துக் கொள்ள வேண்டியது
அரிசி	15 – 25	15
பருப்பு	0·5–1·5	3
பால்	கிடையாது	8
கீரை	0·5–1·0	4
காய்கறி	2·0–5·0	6
பழம்	கிடையாது	2
கொழுப்பு	1·0 (குறைவு)	2

(27) கைக்குத்தல் அரிசி உண்பவர்கள்

மாகாணங்கள்	கைகுத்தல் அரிசி உண்பவர்களின் விகிதம் (1938)
1 பீஹார்	90
2 அஸ்ஸாம்	85
3 ஐக்கிய மாகாணங்கள்	85
4 ஒரிஸா	80
5 வங்காளம்	75
6 ஹைதராபாத்	70
7 திருவாங்கூர்	45
8 சென்னை	30
9 பர்மா	20

மாகாணத்தில் கைக்குத்தல் அரிசியை உண்பவர்களின் தொகை மிகச்சிறியதே என்பதை உணரவும்.

அத்தியாயம் 6

பிலிப்பைன் தீவுகளில் மெருகு கொடுத்த அரிசியின்மீது விதித்தவரி

பிலிப்பைன் தீவுகளில் மெருகுகொடுக்கும் அரிசிக்கும், அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மெருகு கொடுத்த அரிசிக்கும் கீழ்க்கண்ட வரிகளை சர்க்கார் விதித்திருக்கின்றனர்.

சட்டம் 1:– அரிசியின் மேல் தோலோ அல்லது முளையோ அல்லது வேறு தோல்கள் அழிபட்டிருக்குமானல் அவ்வரிசி சட்டத்தில் காணும் மெருகு கொடுத்த அரிசி வகுப்பைச் சாரும். அவ்வரிசியிலுள்ள பாஸ்பரஸ் பதம் (Phosphorus pentoxide) சதவிகிதத்தின் 10ல் 4 பாகத்துக்குக் கீழிருந்தாலும் அது மெருகு கொடுத்த அரிசியின் வகுப்பைச் சார்ந்ததாகும்.

சட்டம் 2:– பிலிப்பைன் தீவுகளிலேயே அரிசி மெருகு கொடுக்கப்பட்டு வெளியே வியாபாரத்துக்குக் கொண்டு செல்லும் பொழுது அதன்மீது வரி போடப்பட்டு வசூலிக்கப்படும். ஆனல் பிலிப்பைன் தீவுகளிலிருந்து அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மெருகுகொடுத்த அரிசிக்கு வரிபோடுவதில்லை. இவ்வளவு அளவு அரிசி வெளியே ஏற்றுமதி செய்யப்படுமென்று வியாபாரிகள் தகுந்த அட்தாட்சியுடன் சர்க்காருக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

சட்டம் 3:– ஐக்கிய அமெரிக்காவிலிருந்தும் மற்ற அன்னிய நாடுகளிலிருந்தும் இறக்குமதியாகும் மெருகுகொடுத்த அரிசிக்கு இறக்குமதிவரி விதிப்பதல்லாமல் உள்நாட்டு வரியும் விதிக்கப்படும். இந்த உள்நாட்டு வரிகொடுக்கும் வரை இறக்குமதி செய்யப்பட்ட மெருகு கொடுத்த அரிசி சுங்க அதிகாரிகளிடமே இருக்கும்.

சட்டம் 4:- பிலிப்பைபின் தீவுகளில் சாராயம், புகையிலை சாமான்கள் இவைகள்மீது 1904-ம் வருஷம் போடப்பட்டுத் திருத்தம் செய்யப்பட்ட ஒரு சட்டத்தில் மெருகு கொடுத்த அரிசியும் அடங்கியதே.

சட்டம் 5:- இச்சட்டங்களை மீறுபவர்களுக்கு 100 பைஸா நாணயத்துக்குக்

குறையாமலும், 1000 பைஸா நாணயத்துக்கு மேற்படாமலும் அபராதம் விதிக்கப்படும்; அல்லது ஒரு மாதத்துக்குக் குறையாமலும், ஐந்து வருஷங்களுக்கு மேற்படாமலும் சிறைத்தண்டனை அளிக்கப்படும்; அல்லது குற்றத்துக்குத் தகுந்தபடி இவ்விரண்டு தண்டனைகளும் விதிக்கப்படும்.

நாம் உட்கொள்ளவேண்டிய உணவின் அளவு

நாம் உட்கொள்ளவேண்டிய உணவுப்பொருள்களின் அளவுகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(1) வைடமின் 100-க்கு இவ்வளவென்று சர்வதேசிய அளவாக ஸ்திரப் படுத்தப்பட்டிருக்கிறது.

(2) 'கெலோரி' (Calories) என்று கூறப்படுவது உஷ்ண அளவைக் குறிப்பிடுகிறது.

வயது	உஷ்ண அளவு
14வயதுக்குமேல் (ஆண்)	2,600
14வயதுக்குமேல் (பெண்)	2,100
குழந்தை	
12-லிருந்து 13 வரை	2,100
10 ,, 11	1,800
8 ,, 9	1,600
6 ,, 7	1,300
4 ,, 5	1,000

(3) ஆகாரத்தில் இருக்கவேண்டிய உணவுகளின் அளவு பின் வருமாறு:

உணவு	அளவு
புரோடீன்	73 கிராம்
கொழுப்பு	74 ,,
கரியுப்பு	408 ,,
கெலோரி	2,590 ,,
கால்ஷியம்	1·0 ,,
பாஸ் பரஸ்	1·47 ,,
இரும்பு (மில்லிகிராம்)	44·00
	(சர்வதேசிய அளவு)
வைடமின் ஏ 7,000	,,
வைடமின் 1 பி 400	,,
வைடமின் ஸி 170·0	(மில்லிகிராம்)

(4) கர்ப்ப ஸ்திரீ எடுத்துக்கொள்ள வேண்டிய உணவுகளின் அளவு: அதிக உணவு எடுத்துக்கொள்ள வேண்டியதைச் சதவிகிதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கெலோரி	25	சதவிகிதம்
புரோடீன்	50	,,
கொழுப்பு	10	,,
கால்ஷியம்	100	,,
பாஸ்பரஸ்	50	,,
இரும்பு	50	,,

மேற்கூறப்பட்ட உணவுப் பொருள்களெல்லாம் அடங்கியிருக்கும் ஆகாரத்தைத்தான் உட்கொள்ளவேண்டிய மேலான ஆகாரமெனலாம். பெரும்பாலான இந்தியர்கள் இந்தப்பொருள்களை அடையவேண்டுமானால் அவர்கள் உட்கொள்ளும் அரிசி மெருகுகொடாததாக இருக்கவேண்டும். ஏனென்றால் மெருகு கொடாத அரிசியில்தான் மேற்கூறிய பொருள்கள் வேண்டிய அளவு அடங்கியிருக்கின்றன. ஆதலால் மெருகு கொடாத அரிசியை நாமும் உட்கொள்ளுவதல்லாமல் பிறரையும் உட்கொள்ளச் செய்வோம்.

(முற்றிற்று)

பாரதி நினைவு

அந்தக் கண்களில் தாங்கமுடியாத ஏக்கத்தை வெளியிடும் பார்வை இருக்கிறதே, எதை நினைத்து ஏங்குகிறார் அவர்? இதில் மட்டுமல்ல, அவருடைய படங்கள் எல்லாவற்றிலுமே சந்தோஷக் களையே இல்லை. கண்களுக்குப் பின், யமுனா நதியின் வேகத்துடன் கண்ணீர் பொங்கிக் குமுறுவதை அவ் விழிகள் தடுத்து நிறுத்த எவ்வளவு கஷ்டப்படுகின்றன! அவர் மன நெகிழ்ச்சிக்கு என்ன காரணம்? ஏன், தேசமும் மனுஷ்ய குலமும் சீரழிந்துகொண்டிருக்கிறதே என்பது தான்.

துக்கத்தை அடக்க முடியாமல் ஆர்ப்பரித்தார், அழுதார், கலகல வென்று பைத்தியம் போலச் சிரித்தார், கவிகளை வர்ஷித்துத் தள்ளினார். அப்படியும் துக்கம் தணியவில்லை! நாளுக்கு நாள் அது குமிழியிட்டுக் கிளம்பி, கடைசியில் அவர் மனத்தை வெதும்ப வைத்து உயிரையே கொண்டுபோய் விட்டது!

மகாகவி—இல்லை, தேசியகவி—இல்லை இல்லை, ஆவேசகவி பாரதியாரை நினைப்போம். அந்த எண்ணம் நம்மை வீரர்களாக்கும், விடுதலையும் அளிக்கும்!

'ரோஜா'

ம. கோவிந்தசாமி

அன்றைக்கு மறுநாள் தாவரநூலில் பரீட்சை. இரவு வெகுநேரம் படித்ததால் நன்றாகத் தூங்கிவிட்டான் அறிவழகு. விடியச் சிறிது நேரத்திற்குமுன் திடீரென்று எழுப்பிவிட்டாள் அவன் தாய். இரவில் கண்ட இன்பமான கனவை நினைத்து நினைத்துப் பார்த்தான்...... ஆஹா! எவ்வளவு ஆனந்தமாக இருந்தது! அவ்வளவு விசேஷம் என்ன அக்கனவில்? படித்துப்பாருங்களேன்! தானே தெரிகிறது.

காலைநேரம். அக்ஞான இருளில் மயங்கி உரங்கிக்கொண்டிருந்த மக்கள் கதிரவனின் தோற்றத்தைக்கண்டு, இறைவனைக் கருமயோகத்தின் மூலம் வழிபட ஆரம்பிக்கும் நேரம். அந்நாளை நன்னாளாக்க, காலையில் மகிழ்ச்சிபூத்த மனமுடையவனாய் இருக்கவேண்டும்.

அறிவழகு எழுந்து இறைவனை வணங்கி, பக்கத்திலுள்ள தோட்டத்திற்குள் நுழைகிறான். விருந்தினரைப் புன்னகையுடன் அழைக்கும் இல்லறத் தம்பதிகள்போல் மலர்ந்த புஷ்பங்கள் அன்பு மணம் வீசும் மனத்துடன் விளங்குகின்றன. குயில்கள் மைனாக்கள் முதலிய இசைப்பறவைகள் முன் பாட, பின் பாடும் குஞ்சுகளின் சப்தம். இறைவனைத் தாம் பாடுவதுபோல் குழந்தைகளையும் பாடி வழிபடச்செய்யும் உத்தமப் பெற்றோர்களின் இசையைப் போன்றும், குழந்தைகளின் மழலைக் கீதத்தையும் போன்றது. கிளியின் மழலையும், வண்டுகளின் ரீங்காரமும், மயில்களின் ஆடலும் இயற்கை யன்னையின் நடனமாகத்தோன்றின. இவற்றையெல்லாம் கண்ட அறிவழகன் மகிழ்ச்சி பொங்கும் மனமுடையவனாய், தோட்டத்தைச் சுற்றிவந்தான். பசுந்தளிர்களின் மத்தியில் விளங்கும் பூங்கொத்துக்கள், இலையுடன் கட்டிய பூமாலையென விளங்கின.

ஓரிடத்தில் புன்னகை பொலியும் செந்நிறமுடைய மங்கை யொருத்தி செடியின் மத்தியில் பூக்கொய்வது போலிருந்தது. காலை. தமிழிளைஞன் உள்ளம் எப்படி யிருக்கும்? மனம் காதலால் நிறைந்தது. கட்டித்தழுவத் தாவிய கைகள் சட்டென்று பின் வாங்கின. ரோஜா முட்களால் குத்தப்பட்ட இளைஞன், அது மங்கையல்ல, மலரெனக் (ரோஜா) கண்டான். காதலால் அடிக்கடி ஏற்படும் வீண் பிரமைகளின் இயற்கையை யெண்ணி நாணினான். நல்லவேளை, அங்கொரு மங்கையுமில்லை. முட்கள் குத்தியதால் விண் விண்ணென்ற வலியின் நடுவில் ரோஜாக் காதலும் அவன் உள்ளத்தில் படர்ந்தது.

என்ன விந்தை! மலர்ந்த முகமும் பசுநிற ஆடைகளணிந்த உடலும் பலவித பூக்களால் அலங்கரிக்கப்பட்ட முடியும் கொண்ட பெண்ணுருவமொன்று, அறிவழகனை வாரியணைத்து முத்தமிட்டது. "குழந்தாய்! அமைதியடை" யென்றது. பார்த்தான். இயற்கையன்னை! மனம் பூரித்தது, உடல் நடுங்கிற்று, வீழ்ந்தான் வணங்கி எழுந்தான்.

அவள் "குழந்தாய்! பயப்படாதே! கொடுமையும், அமைதியும் உடைய உலக உயிர்களிலும், தாவரங்களிலும் எங்கும் தங்கி நடம்புரிபவள் யானே! என்னை வழிபடு. இறைவனை வழிபட்டவனாவாய்" என்று தன் கரங்களை உயர்த்தி வாழ்த்தினாள். அறிவழகு அக மகிழ்வு கொண்டான்.

"தாயே முட்கள் நிறைந்த செடியில் புன்னகை மாறா முகமும், அன்பு மணமும்கொண்டு விளங்கும் ரோஜாவாகத் தாங்கள் தோன்றியதென்ன?" என்று வினவினான்.

"குழந்தாய்! இன்பம் பிறப்பது துன்பத்தில்தானே. துன்பத்தை எதிர்த்து நின்றால்தான் பகைவனும் கண்டு விரும்புவான். என்னிடமுள்ள தேனைக் கொள்ளை கொள்ளும் வண்டுகள், பூச்சிகள் முதலியன என்னை விரும்புவது இதனால்தான். 'இன்னாமை இன்பமெனக் கொளின் ஆகுந்தான், ஒன்னார் விழையும் சிறப்பு' என்பதை யறியாயோ? புன்னகையுடன் எப்பொழுதுமிருப்பது ஒருகலை. காந்தியைப்பார்" என்றாள்.

"ஆனால் மணத்தையும், அழகையும் பார்ப்பவர் மூக்கிற்கும், கண்களுக்கும் விருந்தாக்குகிறீர்கள். தேனையும் மகரந்தத்தையும் பூச்சிகட்கும் வண்டுகட்கும் விருந்தாக்கி கடைசியில் மாலையாய் பெரியோர்களையும், இறைவனையும் அலங்கரித்து வழிபடுகிறீர்கள். வாடியபின் னும் பலவித மருந்துகட்கு உதவுகிறீர்களே! அதன் நோக்கமென்ன?"

"ஆம், அருவியைப் பார். தென்னையைப் பார். எண்ணெயில் திரியை எரியவிட்டு ஒளிவீசும் விளக்கைப்பார்! தனக்காக வாழ்வது மிருகமன்றோ? அறிவுதான் அழகு. அன்புமணமும், நல்லொழுக்கமென்னும் தேனும் கொண்டுவாழ். அருகிலிருக்கும் ஈயாரைவிட்டு, வண்டுகள் போல் பகைவரும் உன்னைத்தேடிவருவர். பெரியோர் மகிழ உன் இனத்தாருக்குத் தொண்டுசெய். நன்றியுடன் என்றும் ஆண்டவனைப் போற்று. பிறருக்காகவே வாழவேண்டு மென்பதை உணர்த்தும் பணியே என்னுடைய தென்பதை பகுத்தறிவுடைய மனித குலத்திற்கு உணர்த்து!" என்று கனிவுடன் மொழிந்தாள் இயற்கையன்னை.

"ஆம் தாயே, பூத்து விளங்கும் மலர்களை மக்கள் என் உடனே பறித்துவிடுகின்றனர்? செடியிலேயே யிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? கடைசி வரையில் இன்பமாய் இருந்து விழுந்து விடுவதேன்! மண்ணில் கலப்பதேன்!"

"அப்படியல்ல. உலகில் அழகைக் கண்டால்தான் மக்கள் மனம் பொறுப்பதில்லையே! இருந்த இடத்திலா புகழ் வரும்? சென்று பணிசெய்தால்தான், புகழை நிறுத்திச் செல்லலாம். நம் பெருமையை வேரின் அடிமண்ணில் வாழும் தவளைகள் எப்படி யறியும்? என் மனம் காற்றின் மூலம் வானத்திலும் உடல் மண்ணிலும் கலக்கிறது போல் உயிர்களின் ஆன்மாவும் காற்றின் மூலம் வானிலும் உடல் மண்ணிலும் கலந்துவிடுகின்றது. நான் வாடி யிறப்பதன்மூலம் மரணத்தின் மாண்பை புணர்த்துகிறேன். சாகாதிருந்தால் பிறப்பேது? உலக இயக்கம் நின்றுவிடும். இருளை ஒளியும், துன்பத்தை இன்பமும் தொடர்வதுபோல மரணத்தைப் பிறப்பு தொடருகின்றது. உலகத்தை நடத்த என்னால் கொள்ளப்படும் இருவித ஆடல்களே இறப்பும் பிறப்பும். இவ்விரண்டின் பெருமையை யறியாதவன் என்னையும் இறைவனையும் அறியாதவன். சாகத் தெரியாதவன் வாழத் தெரியாதவன். பூ இறந்து பிஞ்சும், அது இறந்து காயும், காய் இறந்து பழமும் ஆகிறது. பழத்தை உண்டு களிக்கிறோம். அது போல இறந்தால் அடுத்த புதிய பிறப்பு வருகிறது. இன்பம் பிறக்கிறது. இதுவே மரணத்தின் மாண்பு. இதை யறியாத மக்கள் மரணத்திற்குப் பயப்படுகின்றனர். கோழைகள்! மரணத்தை யறிந்து பணிசெய்து வாழவும், பின் பிறப்பில் இன்பத்தை யடையவும் அறியும் கோடிக்கணக்கான இளைஞர்கள் இந்நாட்டிற்குத் தேவை. அவர்கள் மரணத்திற்கும் அஞ்சாது, அஹிம்சைப் பணி செய்து நாட்டுக்குச் சேவைபுரியவேண்டும். வள்ளுவர், விவேகானந்தர், காந்திஜி, நேரு போன்றவர்கள் மனித ரோஜாக்களே. நீயும் அவர்கள்போல் ஆகப் பயின்றுகொள்!" என்று கலங்கிய முகத்துடன் கூறினாள்.

"அன்னையே! என் வருந்துகின்றீர்கள், புன்னகைகொண்ட முகம் என் வாடுகின்றது?" என்று கேட்டான் அறிவழகு.

"அந்தோ! அன்பே மனிதர் மதமும் இன்பமே மனிதருக்குத் தெய்வமும் சேவையே செயலெனவும் எங்கும் நிறைந்து செயலின்மூலம் உணர்த்தும் என்னெறியை யறியாமக்கள் போரிட்டு மக்களைக் கொல்லுகின்றனர். எத்தனை பிளவுகள் தோன்றுகின்றன! மாபெருங் கவிகள் திகழ்ந்து என் பெருமையை யும், அன்பு நெறியையும் உணர்த்தி மறைந்தனர்........" என்றாள் அவள்.

"தாயே! திருவருள் துணைகொண்டு தாய்மொழியின் பெருமையையும் கவி களின் பெருமையையும் பரப்புவதன் மூலம் என்னாலான சேவைசெய்து தங்கள் வருத்தத்தை நீக்க முயற்சிக் கிறேன்" என்றான் அறிவழகு.

* * *

"அறிவு, எழுந்திரு. பரீக்ஷைநாள், இப்படித் தூங்குகிறாயே!"

அறிவழகு திடுக்கிட்டு எழுந்தான். உடனே தோட்டத்திற்குள் சென்று பசுந்தளிர் மரங்களைக் கண்டான். ரோஜாச்செடியில் மலர்ந்திருந்த ஒரு பூவை ஆவலுடன் கண்டு மகிழ்ந்தான். இயற்கையைப் போற்றி இறைவனை வணங்கினான். விரைந்துசென்று காலைக் கடன்களை முடித்து, உணவுண்டு சிறிது நேரம் படித்துவிட்டுப் பாடசாலைக்குச் சென்றான். பரீக்ஷை மிக நன்றாகவே முடிந்தது.

அன்று 'ரோஜா'வைப்பற்றி ஏதாவது கேள்வி வந்தால் ஜமாய்த்துவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான். மார்க்கு வந்தாலும் வராவிட்டாலும் சொப்பனத்தை வர்ணித்து எழுதித் தள்ளிவிடுவதென்று தீர்மானித்துவிட்டான். ஆனால் ஒரு கேள்வி கூட வரவில்லை!

மாலை உலா

இராசிபுரம் ரமணி

மனமே, வா! இக்கானகத்தின் இனிய காட்சிகளை நாமிருவரும் கண்டு களிப்போம். அன்று வேடுவன் உரைத்தது ஞாபகமிருக்கிறதா? இங்கேதான் குரூரமும் கோபமும்கொண்ட புலியொன்று வாசம் செய்கிறதாம். ஒரு பிராணியாவது இக்காட்டின் மூலமாக நம் கிராமத்துக்கு வந்துசேர்ந்ததாகத் தெரியவில்லை!

என்றாலும் என்ன? பயத்தை ஒழி. தைரியம் நம்மைக் காப்பாற்றும். பசுமையான புதர்களில் விஷப்பாம்பு இருக்குமென்பதை நம்பாதே. இன்பமயமான எண்ணங்களிடையே அதை மறந்துவிடு.

உள்ளமே, ஏன் இப்படி நடுங்குகிறாய்? சற்று நில். அமைதியைக் கெட்டியாகப் பற்றிக்கொள். வளைந்த மூங்கில்கள் இயற்கையாகவே பந்தலைப்போல அமைந்துள்ள அழகைப் பார்! இன்ப வாசனை வீசும் மலர்கள் நம்மை அன்புடன் வரவேற்பது போலில்லையா? ஆஹா! இவைகளை எந்த ஸுகுமாரி கொய்து தன் கேசத்தில் அணிந்து கொள்ளப்போகிறாள்! இவ்வளவு நல்ல மலர்கள் பாழாவதைக்கண்டு நான் எப்படிச் சகிப்பேன்!

என் காதலி இப்பொழுது அருகில் இருந்தால் அவளது கரிய கூந்தலில் அன்போடு இம்மலர்களைச் செருகி மார்போடு தழுவி இன்பக்கடலில் நீந்துவேனே!

கனி வர்க்கங்களைத் தின்னும் அணில்கள் கீச் கீச் என்று ஆர்ப்பரித்து, என் காதல் பித்தைக்கண்டு நகைக்கின்றன. அதனாலென்ன? மனமே, உனக்கு என்ன நாணம்? என் காதலியிடம் சென்று இவ்வியற்கை வனப்பைக் கவர்ச்சியுடன் சொல்லு.

குயிலின் இன்னிசை என் செவிகளை நிரப்புகிறது. கிளிகளின் மழலை இன்ப நாதத்தை எழுப்பி என்னை மகிழ்விக்கிறது. மயில்கள் அற்புதமாக அதோ கூத்தாடுகின்றன! என்ன நேத்திரானந்தம்!

பசுமையின் ஆட்சியில் சிறைப்பட்டு இயற்கையின் மாட்சியில் மயங்கிவிட்டேன். இன்பக்கடலில் ஒய்யாரமாக மிதக்கிறேன். என் ஆருயிர் அணங்கும் இங்கிருப்பின் எவ்வளவு மோகனமாக இருக்கும்!

நரிகள் ஊளையிட ஆரம்பித்துவிட்டனவே. அடடா! நான் மறந்தே போய்விட்டேன். கானகத்திற்குப் பகல் ராத்திரியில் அன்றோ? மதியின் ஒளி எனக்கு வழிகாட்டுகிறது. இருள், ஒளியை எதிர்த்துப் போராடுகிறது.

இதோ—கானகத்தை விட்டுச் சௌகரியமாக வெளியேறிவிட்டேன். மகிழ்ச்சி இங்கே நிகழ்வதாகத் தெரியவில்லையே. இங்கும் தான் சந்திரன் பிரகாசிக்கிறான்; தென்றலும் குளிர்ச்சியாகவே வீசுகிறது; என்றாலும் இன்ப உணர்ச்சியே இல்லையே:

அதோ உயரத்தில் உல்லாசமாகப் பறந்து செல்கின்றனவே வானம்பாடிகள், பார்த்தனையா? அவைகள் என்ன பாடுகின்றன?.... 'நீ என்னுவது பிழை. உன் காதலி உனக்கு இன்பமூட்டத் தயாராக இருப்பதை மறந்துவிட்டாயோ?' என்று பாடிச்செல்வது போலில்லையா?

ஆம்! என் காதலி எனக்காகக் காத்துக்கொண்டு இருப்பாள். நான் விரைந்து செல்லவேண்டும்.

[ஆங்கிலக் கவிதையின் தழுவல்]

சிதம்பரநாத முதலியார்

ஸு. வே.

சீகாழி என்ற பெயர் காதில் விழும்போதெல்லாம், சமயத் தொண்டு புரிந்த சம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளும், சமூக சேவை செய்த சிதம்பரநாத முதலியாரவர்களும் நம் மனத்திரையில் காட்சி யளிக்கிறார்கள். சம்பந்தருடைய சரித்திரம் எல்லோரும் அறிந்தது. சிதம்பரநாத முதலியாருடைய வரலாற்றையும் சுருக்கமாகவாவது தமிழர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

பேரையும் புகழையும் நாடிப் பொது வாழ்வில் ஈடுபடுவோர் பலர். பிரமாதமான ஆர்ப்பாட்டங்களும், விளம்பரங்களும் அதிகமாக ஆக, அவர்கள் உச்சி குளிர்ந்து மேலும் தீவிரமாக, தேசத்திற்கோ சமூகத்துக்கோ, அல்லது கலாச்சாரத்துக்கோ 'தொண்டுபுரிய' முன்வருவார்கள். இதற்கு நேர்மாறான ஸ்வபாவமுடையவர்களும் சிலர் உண்டு. அவர்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை! அவர்கள் செய்யும் நற்காரியங்களையும், உபகாரங்களையும், நன்கொடைகளையும் பரம ரகசியமாக வைத்துக்கொள்ள விரும்புவார்கள்! தங்களுடைய உழைப்பு தேசத்திற்கு நன்மை பயக்கவேண்டுமென்பதுதான் அவர்களுக்குள்ள ஒரே ஆசை—சொந்தப் பெருமையல்ல!

இந்த இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த உத்தமர்கள், நல்லவேளை, அவ்வப்போது தோன்றி அமரிக்கையாக உழைத்துத் தேச நலனைக் கண்காணித்து வருகிறார்கள். இம்மாதிரி மகான்கள் சிலரை நம் தமிழ்நாடு பெற்றுக் கொடுத்திருக்கிறது. அவர்கள் வரிசையில் சமீபத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் சீகாழி சிதம்பரநாத முதலியார் ஒருவராவர்.

பாரம்பரையாகப் பெரிய குடும்பத்தில் பிறந்தவர். மேனாட்டுக் கல்வியில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தார். இருந்தாலும் தாய்ப்பாஷை, மதம், பழக்கவழக்கங்கள் இவற்றில் உறுதியான பற்றுக்கொண்டு வாழ்ந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலமுறைக் கல்வி பெற்றவர்கள் பொதுவாகத் தேசிய விஷயங்களை 'ஒருமாதிரி' ஒதுக்கி அலட்சியம் செய்வது வழக்கமல்லவா? 'நமது நாடு' என்று உச்சரிக்கக்கூட விரும்ப மாட்டார்கள். ஆனால் முதலியாரிடம் சிறுவயது முதற்கொண்டே தன்மதிப்பும், தேசாபிமானமும் ஊறிக்கொண்டிருந்தபடியால், பிற்காலத்தில் நாட்டின் நன்மைக்காகத் தம்முடைய யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் தைரியத்துடன் வெளியிடும் தீரரானார்.

தொண்டைமண்டல வேளாளர் மரபைச்சேர்ந்த ஸ்ரீமான் முதலியார் 1878-ஆம் வருஷம் ஜூலை மாதம் பிறந்தார். இவருடைய தந்தையாராகிய சி. கிருஷ்ணஸ்வாமி முதலியார் சிறந்த படிப்பாளி. விவசாய அபிவிருத்தியில் மிகுந்த சிரத்தையுள்ளவர். பயிர்த்தொழிலில் யந்திரசாதனங்களைப் புகுத்தி, அவை எவ்வளவுதூரம் பயனுள்ளவை என்றறிய முன்வந்தவர். விவசாய சம்பந்தமுள்ள வெளியீடுகளில் அவருடைய அநுபவங்களைப்பற்றின வாதப்பிரதிவாதங்கள் மலிந்துகிடக்கும். இப்படிப்பட்ட தந்தையாரைச் சிறு பிராயத்திலேயே இழந்துவிட்ட சிதம்பரநாத முதலியார் தம்முடைய சிறிய தந்தையாராகிய சபாநாயக முதலியாருடைய வளர்ப்பில் இருந்துவந்தார்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே நல்ல சூடிகை. ஆரம்பத்தில் சீகாழியிலேயே கல்விபயின்று பிறகு கும்பகோணம் காலேஜில் பி. ஏ. வரையில் படித்தார். பரீட்சை சமயத்தில் சபாநாயக முதலியாரும் காலமாகிவிடவே, படிப்பை நிறுத்திவிட்டுக் குடும்ப காரியங்களை நிர்வகித்து நடத்த வேண்டியதாயிற்று.

பெரிய குடும்பம்—அவிபக்த குடும்பம் என்று சொல்வார்களே, அது. தக்க வயதுவந்த அண்ணன் தம்பி முறையிலுள்ளவர்கள், அவர்களுடைய மனைவிமார்கள், குஞ்சு குழந்தைகள்; எல்லோருக்கும் ஏற்பட்டிருந்த வேலைக்காரர்கள் வண்டிமாடுகள், அப்பப்பா! இவையனைத்தையும் அரவணைத்துக் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்துவது சாமானியமா! குடும்பத்தில் உட்பூசல் எழாமல், குதூகலம் தாண்டவமாடும்படி எப்படித்தான் நிர்வகித்தாரோ! அதுமட்டுமா? நிலபுலன்களையும் வாங்கிச் சேர்த்து, எஸ்டேட்டை இருமடங்கு பெரிதாக்கினார்!

சிறிது சிறிதாகப் பொதுவாழ்வில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் ஏற்படவாரம்பித்தன. 1903-ஆம் ஆண்டு தஞ்சை ஜில்லா போர்டு, மாயவரம் தாலுகா போர்டு இவைகளுக்கு அங்கத்தினராக நியமிக்கப்பெற்று, பன்னிரண்டு வருஷங்கள் அந்த ஸ்தாபனங்களின் மூலம் பல நன்மைகளைச்செய்தார்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள கிராமங்களில் செய்திப் போக்குவரவுக்கான சாதனங்கள் அப்போதெல்லாம் ரொம்பவும் சொற்பம். வருஷமொன்றுக்குச் சுமார் ஆயிரத்தைந்நூறு ரூபாய்தான் ஒதுக்கியிருந்தார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! முதலியாருடைய பெருமுயற்சியால் ஐந்தாறு ஆண்டுகளுக்குள், அதாவது 1912-ல், முப்பதாயிரம் ரூபாய் ஒதுக்கும்படி செய்தார். பிற்பாடு நாளாவட்டத்தில் வேறு அதிகமான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. இவர் முயற்சியைப் பாராட்டி ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் பேசுகையில் "தஞ்சை ஜில்லா பட்ட கஷ்டத்தை நிவர்த்தித்த பெருமை, ஏகதேசம் சிதம்பரநாத முதலியாருக்கே உரியது" என்று தெரிவித்தார். ஜில்லாபோர்டில் நியமன அங்கத்தினருடைய கோட்பாடுகளைவிட்டு விலகி, பல நற்காரியங்களைச் செய்யத் தாமே முன்னின்றார். சத்திரம் இலாகாவுக்குட்பட்ட சத்திரங்களில் இருந்த ஊழல்களைக் களைந்தெறிந்தார்.

1914-ஆம் வருஷம் முதல் சுமார் பதினைந்து ஆண்டுகள், நாகை, கும்பகோணம் தேவஸ்தான கமிட்டிகளில் செல்வாக்குள்ள மெம்பராகப் பணியாற்றி, ஆலய நிர்வாகத்தைச் செவ்வனே பாதுகாத்துவந்தார்.

சட்டசபை என்ற பெயருடன் அக்காலத்திலும் சென்னையில் ஒரு ஜனப்பிரதிநிதிசபை இருந்தது. 1913ல் தமிழ்நாட்டு நிலச்சுவான்தார் தொகுதிக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பெற்று சட்டசபை மெம்பரானார். எந்த விஷயத்தையும் தம்முடைய மனத்தில் நன்றாக ஆராய்ந்துபார்த்து, எது ஜனங்களுக்கு நன்மைபயக்குமோ, அதைவற்புறுத்திப் பேசுவார். அந்தநாளில் மைசூர் ராஜ்யத்தில் கண்ணம்பாடி அணைக்கு ஏற்பாடாகி வந்தது. முதல் முதலில் அதைக் கண்டித்து தீவிரமான எதிர்ப்பிரசாரம் செய்ய முன்வந்தார். கண்ணம்பாடி அணை கிரியாம்சையில் கட்டியாகிவிட்டால் என்னென்ன தீங்குகள் நேரும் என்பதை லண்டனிலுள்ள அதிகாரிகளுக்கு முதற்கொண்டு அறிவித்தார். அதன் பொருட்டு ஏராளமான பொருளைத் தாமே சொந்தத்தில் செலவழித்தார். அதன்பயனாக, தஞ்சைஜில்லா நிலங்களுக்கு வரக்கூடிய பெருங்கேடு வெகுவாகக் குறைந்தது. கண்ணம்பாடி அணைக்காக ஆரம்பத்தில் போட்ட திட்டங்கள் சிலவற்றை மாற்றி, எந்த வகையில் இருந்தால் தஞ்சை திருச்சி ஜில்லாக்களுக்குப் பெருவாரியான தீங்கு நேராதோ, அம்முறையில் அணையை நிர்மாணம் செய்ய ஏற்பாடு செய்தனர். அதற்காக இன்றும் ஸ்ரீ சிதம்பரநாத முதலியாரை வாழ்த்துகிறார்கள்.

கால்நடை அபிவிருத்தி, கிராமச்சுகாதாரம், பஞ்சாயத்து நிர்வாகம் இவற்றில் அளவற்ற ஊக்கம் எடுத்துக்கொண்டு உழைத்தார். நிலச்சுவான்தார்களது நலனுக்காகச் சட்டசபையில் சேவை செய்து வந்ததோடல்லாமல், சட்டசபைக்கு வெளியிலும் விவசாய சம்பந்தமான கிளர்ச்சிகளை உண்டுபண்ணி,

☆ வீட்டு முனையை பாதுகாருங்கள்

ஹிந்துஸ்தான்

இன்று வாழ்க்கை நிச்சயமற்றதாயுள்ளதைப்போல் எப்பொழுதும் இருந்ததில்லை. இப்பொழுதைப்போல் இன்ஷ்யூரன்ஸின் அவசியம் எப்பொழுதும் இருந்ததில்லை. உங்களை நம்பியுள்ளவர்களுக்கு பாதுகாப்பளிக்க சிறந்த வழி. இந்தமுறை பாலிஸிதாரர்களுக்கு அளிக்கும் மனச்சாந்தி வேறு எவ்வகையிலும் கிடைக்காது.

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட் ☆

இந்த அவசர சமயத்தில், ஆயுள் சம்பந்தமான சகல விதபாதுகாப்பையும் அளிக்கின்றது. இன்ஷ்யூரன்ஸ் அதிக இன்ஷ்யூரன்ஸ் செய்ய இதுவே காலம். இப்பொழுதே கவனியுங்கள்.

தலைமை ஆபீஸ் :
6-A, சுரேந்திரநாத் பானர்ஜி ரோட்,
கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு :
7/67, ஜெயில் ரோட்,
கோயமுத்தூர்.

அதற்கப்புறம் எவ்வளவோ வருஷங்களாகிவிட்டன. கண்ணன், பள்ளிக்கூட புஸ்தகங்களில் எழுதியிருப்பது போல, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகவே வளர்ந்து, கலியாண மாப்பிள்ளையாக மணப்பந்தலில் இன்று உட்கார்ந்திருக்கும் வேளையில் என் மனைவி என்னைப் பார்த்துச் சொன்னாள்: "பதினைந்து வருஷங்களுக்கு முன் நீங்கள் குஞ்சம்மாள் பேத்திக்கு மஞ்சள் துணியில் முடிந்த வஸ்துவை விற்றுக் கலியாணம் செய்துகொடுத்தீர்கள். அந்தப் பெண் குடியும் குடித்தனமுமாக உங்களை வாழ்த்திக்கொண்டிருக்கும்! எனக்கு வர நாட்டுப் பெண்ணுக்கும் அவளைப்போல பாக்யம் கிடைக்கவேண்டும்—மகமாயிதான் கிருபை செய்யணும்" என்று.

தெய்வத்துக்கு காணிக்கை காணிக்கை என்று திரவியத்தை விரயம் செய்யாமல், அதை ஏழை எளியவர் வாழ்க்கையை மேம்படச் செய்ய உபயோகித்தால், அதுவே தெய்வத்துக்கு மிகவும் உவப்பான காணிக்கையாகும். இந்த உண்மையை யார்தான் மறுக்க இயலும்?

ஒரு விஷயம்!

நாம் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறோம்! ஆனால் மிகவும் உபயோகமுள்ள வழியில் செலவிடுவதும் அவசியமல்லவா?

உங்களுக்குச் சந்தோஷத்தையும் உங்கள் குழந்தைகளுக்கு அறிவையும் கொடுக்கக்கூடிய வழியில் நீங்கள் ஏன் செலவழிக்கக்கூடாது?

ஆம்—'பாரதமணி'க்கு ஒருவருஷ சந்தாவைக் கட்டிவிடுங்கள்!
அதிகமில்லை, மூன்றே ரூபாய்தான் வருஷத்திற்கு.

முதலாளியின் டயரி—சில இதழ்கள்

சிவதானஸிம்ம சௌஹான்

(எஸ். குஞ்சிதபாதம் மொழிபெயர்த்தது)

(முன் இதழின் தொடர்ச்சி)

இன்று நான் பிக்சர் பார்க்கப் போயிருந்தேன். பிலிம் ஒரு இலக்கிய ஆசிரியனுடைய வாழ்க்கையைப்பற்றியது; ஆசிரியன் மெலிஸோலா. எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவே இல்லை. ரோமான்ஸ் என்பது மருந்துக்குக்கூட இல்லை. 'நாநா' விலிருந்தாவது சில காட்சிகள் இருக்கும், நன்றாக இருக்கும் என்று நினைத்தேன்; இல்லை. காலேஜில் ஒரு ஸோஷலிஸ்ட் பரதை புரொபஸரின் தூண்டுதலின் பேரில் ஸோலாவின் புத்தகங்கள் சில படித்தேன்; ஆனால் ஸோலாவின் அல்பத்தனங்கள் அன்றும் கூட எனக்கு வெறுப்பு உண்டுபண்ணின. 'நாநா,' 'ஜர்மினல்' இந்தப் புத்தகங்களின் ஆசிரியனுக்கு இத்தனை மகத்துவம் என் என்று தெரியவில்லை. அவனுடைய துச்ச வாழ்க்கையிலே என்னதான் இருக்கிறது பிரமாதமாக?

என்னோடு மிஸ் மாரிஸனும் வந்திருந்தாள். அவள் படத்தைப் பார்த்துப்பார்த்துப் பரவசமடைந்துவிட்டாள். நடுநடுவில் 'ஆ' 'ஊ' என்று கூச்சல் போட்டுக்கொண்டிருந்தாள். ட்ரீபஸ் நாடு கடத்தப்படும் நிலைமையில் அவள் மெழுகுவர்த்தி மாதிரி உருகிப்போய்விட்டாள். கடைசியாக ஸோலாவின் 'ஸ்பீச்சை' கேட்டபோது குதிக்க ஆரம்பித்துவிட்டாள். அவளுடைய குதூகலத்தைக் கண்டு எனக்குக் கோபம் வந்தது. மெலிஸோலாவை, சமூகத்தின், நியாயத்தின், சமூகத்தின் விரோதியாகச்சித்தரித்துக் காண்பித்திருக்கும் என்று நான் நினைத்தேன்; ஆனால் அவனை ஏழைகளின் தர்ம குருவாகக் காண்பித்திருந்தது. பால் முனிக்கு வேலையே இல்லையோ? அதே கம்யூனிஸ்ட் 'தி குட் எர்த்'தில் பாடுபட்டிருக்கிறான். இந்தக் கம்யூனிஸ்ட்களுக்குக் கலையைப்பற்றி என்ன தெரியும்? பயங்கரமான புரட்சி நிலைமையை சிருஷ்டித்து ஷாங்காயில் பாரவண்டிதள்ளும், பட்டினியால் வாடும் மக்களின் பீபத்ஸ காட்சிகளைக் காண்பித்து, நம்முடைய இந்திய காம்ரேட்கள் போன்ற சிலரை "ரெவல்யூஷன்" "ரெவல்யூஷன்" என்று கத்தும்படி செய்து படம் தயாரித்திருக்கிறார்கள். இந்தப் புரட்சிக் காட்சிகள் ஒன்றில்பால்முனி வியர்வையைத்துடைத்துக்கொண்டு "What is revolution?" என்று கேட்கிறான். அதற்கு வண்டியிழுக்கிறவர்களில் ஒருவன் பெருமூச்சு விட்டுக்கொண்டு "They say it has something to do with Bread" என்று சொல்கிறான். நடிப்புக்கலையின் எல்லையைக் கடந்துவிட்டதாக சொல்லிக் கொள்கிறார்கள். இது கம்யூனிஸ்ட் கலையாம்! அதற்குள்ளே பலவந்தமாக கட்சிப் பிரிவினைகளை நுழைக்கப்பார்க்கிறார்கள். ஸோலாவும் கம்யூனிஸ்ட்தான். இல்லாவிட்டால் 'ஜர்மினலில்' ஏன் தொழிலாளிகளின் தினசரி நிதவாழ்க்கையை இத்தனை பக்கங்கள் எழுதியிருக்கிறான். இத்தனை பயங்கரமான, ஆபத்தான மனிதனுடைய வாழ்க்கையைப் படம் பிடிப்பதிலிருந்து அமெரிக்க பிலிம் கம்பெனிக்காரர்களுக்குப் பைத்தியம் பிடித்துக்கொண்டிருப்பது நன்றாக ஊர்ஜிதமாகிறது; அவர்கள் தங்கள் வர்க்கத்தார்களுக்குத் தாங்களே சவக்குழி தோண்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி பிலிம்களைத் தடைசெய்யவேண்டும். ஹிட்லர் நல்லவேலைசெய்தான், பித்துக்கொள்ளி மார்க்ஸ் முதலிய சமூக சத்துருக்களின் புத்தகங்களைக் குவித்துச் சொக்கபானை மாதிரிக் கொளுத்தி அவர்களிடம், மனிதர்களின் உண்மையான நாகரீகத்திற்கும், முன்னேற்றத்திற்கும் உள்ள சிரத்தையை அவர்களுக்கு அர்ப்பணம் செய்தான் நாம் நம்முடைய

தேசத்திலேயுள்ள எக்கச்சக்கமான நிலைமையினால் வேறு வழியின்றிக் கொள்கை, சுதந்திரம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆங்கில ஆட்சி இல்லாவிட்டால் இந்த மாதிரிச் சேறும், சகதியும் நிறைந்த பாழும் கிணறுகளிலும், குட்டைகளிலும் அகப்பட்டுக்கொண்டிருப்போம்.

மிஸ் மாரிஸனுக்கும் கூட மூளைக்கலக்கம் அதிகமாகிவிட்டது; பிலிமைப் பற்றி வானளாவப் புகழ்ந்துகொண்டிருந்தாள். அவளுடைய ரகஸ்யமயமான ஸௌந்தர்யத்தை நினைத்து நான் பொறுமையாக இருந்தேன்; இல்லாவிட்டால் நடுவிலேயே எழுந்திருந்து வந்திருப்பேன்.

அங்கிருந்து புறப்பட்டு நாங்கள் ஆற்றங்கரையை அடைந்தோம். சந்திரன் இன்பமயமான நிலவைப் பொழிந்துகொண்டிருந்தான். மிஸ் மாரிஸன் என் கையில் அகப்படுவதும் நழுவி ஓடுவதுமாக விளையாடிக்கொண்டிருந்தாள். ஆனால்! என்மனதைக் கொள்ளைகொண்டுவிட்டாள். உலகத்திலே பிரம்மசரியம், கற்பு என்பதெல்லாம் லக்ஷ்ய மாத்திரம். லக்ஷ்யங்களுக்கும், வாழ்க்கைக்கும் வெகுதூரம். காந்திஜி சமயாசமயம் இல்லாமல் எப்போதும்தான் பிரம்மசரியப் பல்லவியைப் பாடிக்கொண்டேயிருக்கிறார்; அவருடைய மனதின் பலவீனம் இதற்கு ஒரு காரணம்; இன்னொன்று பொதுஜனங்களிடையே இந்த மாதிரி விஷயங்கள் பிரசாரம் ஆகவேண்டுமென்ற எண்ணம். இதனால் என்ன நஷ்டம்? நானும்தான் அடிக்கடி கலாசாலைகளில் பரிசு வழங்கும்போது அக்கிராசனர் என்ற முறையில் மாணவ, மாணவிகளின் ஆட்டோகிராப் புத்தகங்களில் "பிரம்மசரியமே வாழ்க்கை" என்றெல்லாம் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறேன்! நம்மிடம் பணம், வைபவம் எல்லாம் இருக்கும்போது வைராக்கியம் சாதனை செய்யத்தகுந்ததல்ல. இவைகளெல்லாம் அனுபவிக்கத்தக்கவையல்லவென்றால், இவைகள் பின் வேறு எதற்குத்தான் இருக்கின்றன?

ஸ்ரீ ஜிலாலாவின் மனைவி விமலாதேவியினிடம் என் மனதில் சில பாவனைகள் உண்டாகி இருந்தன; அவற்றைக் காதல் என்றும் சொல்லலாம். அவள் மிஸ் மாரிஸனைவிட அழகுதான்; ஆனால் ஹிந்து ஸ்திரீயா, வெகுநாள் வரை கட்டிலே, பிடியிலே அகப்படவில்லை; கைக்கெட்டினதும் ஒரேயடியாக ஆத்மசமர்ப்பணம் செய்துவிட்டாள். இதுதான் வித்யாஸம்; மாரிஸன் அகப்படாமலும், அகப்பட்டுக்கொண்டும்.....ஆசைத்தீயை மூட்டிவிட்டும், கொழுத்துவிட்டு எரியும்படி காற்றை விசிவிட்டுப், பிறகு அணைத்துவிட்டும் என்னைத் தவிக்கச் செய்தாள். அதனால் விமலாதேவியைவிட மாரிஸனிடம் எனக்குப் பற்றுதல் அதிகம், விமலாதேவினிடம் எனக்கு அலுப்புக் கூட உண்டாகிவிட்டது. ஆனால் பெரிய முதலாளியின் மனைவி; அவளோடு காரில் போவதைக்கூட கௌரவமாக எல்லாரும் நினைக்கிறார்கள். ஆகையால் அலுப்பைக் காண்பித்துக்கொள்ளக்கூடாது.

.....ஆற்றங்கரையில் உலவிவிட்டு வீட்டுக்கு வந்தேன். என்னுடைய ஸ்ரீமதி மிஸ்டர் காந்திசந்திரனுடைய பங்களாவுக்கு விருந்துக்குப் போயிருந்தாள். திரும்பிவரவில்லை. காந்திசந்திரனுடன்கூட இவள் சேர்ந்து, சேர்ந்து போவதைக்காணும்போது எனக்குக் கோபம் வருகிறது. அந்தப் பேர்வழியைக்கண்டு என் இவ்வளவு மயங்கிப் போகிறாள்? இங்கிலாந்து போய்விட்டு வந்திருக்கிறான், அழகாக இருக்கிறான், வாசித்தவன், முப்பது வயதுக்குமேல் ஆகவில்லை. இருந்தாலும் என்ன? நமக்கு சரிசமானமானவனா? ஐம்பது, அறுபது லக்ஷ ரூபாய் பிரமாதம் ஒரு சொத்தா? இந்தமாதிரிச் சில்லரை முதலாளிகளிடம் பத்துகஜம் அப்பால் இருந்துதான் பேச வேண்டும். ஆனால் நம்முடைய ஸ்ரீமதி மேலே கீழே பார்க்காமல் எல்லோருடனும் சரிசமானமாகப் பழகிவிடுகிறாள்.

பத்தரைமணிக்குத் திரும்பிவந்தாள். வந்ததும் என் கன்னத்திலே மெதுவாகத் தட்டிவிட்டு, "டியர், இன்று ரொம்பத்





வேண்டுமென்றே
உங்களை
அவர்கள்
குறிபார்க்கவில்லை



ஆனால் அவதிப்படும் துர்பாக்கியசாலிகளில் ஒருவராக நீங்கள் ஆகலாம். தலைவிதி அப்படி இருந்தால், நீங்கள் அந்தக் கொடுமைக்கு ஆளாவதிலிருந்து தப்ப முடியாது! ஆனால் நீங்கள் **இன்ஷூரன்ஸ்** மூலம் உங்கள் குடும்பத்தை காப்பாற்றிவிட முடியும்.

விவரங்களுக்கு எழுதுக:

நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,
7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு: 58, கோபதி நாராயணசாமி ரோடு, தியாகராயநகர், மதராஸ்.

தமாஷ்! காந்திசந்தர் டான்ஸிலே எக்ஸ்பர்ட். எனக்கு மூச்சுவாங்க ஆரம்பித்துவிட்டது. ரொம்பக் களைத்துப்போய்விட்டேன்! ஆகையினால் என் தூக்கத்தை 'டிஸ்டர்ப்' பண்ணவேண்டாம். குட்நைட்! என்று சொல்லிவிட்டுப் போனாள். நானும் புன்சிரிப்புடன் குட்நைட் என்று சொன்னேன். ஹூம்!

ஹர்த்தால் இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. த்ஸ-! இன்று அதைப்பற்றி யோசனைபண்ண அவகாசம் இல்லை. இந்த சமயத்தில் என் கண்களுக்கெதிரே மிஸ் மாரிஸனே காட்சியளித்துக்கொண்டிருக்கிறாள்...........

* * *

25 நவம்பர் 1940.

இன்று மானேஜர் அக்கௌண்ட் புக்கை அனுப்பியிருக்கிறார். ஒன்பது நாட்களில் நஷ்டம்!

	ரூ.	அ.	ப.
டோடல் ரூ.	7,55,962	5	9

* * *

ஸ்ரீமதி விமலாதேவி போனில் கூப்பிட்டாள் இரண்டு வாரமாக என் சந்திக்கவே இல்லை என்று கேட்டாள் "இன்று உடம்பு அசௌகரியமாக இருக்கிறது. ஒவ்வொரு அங்கமும் விசித்திரமாக நடுங்குகிறது. மயிர்க்கூச்சல் உண்டாகிறது. அதனால் கொஞ்சம் ஆச்சரியம், பிரமை, ஆதுரம் எல்லாம் உண்டாகின்றன. இந்த அசாந்திக்கு மருந்து உங்களுடைய ....ப்ஸ-.... கட்டாயம் வாருங்கள்; முடியுமானால் பிக்சருக்குப்போவோம். பெரிய விஸ்கி பாட்டில் தயாராக டேபிள் மேலே வைத்திருக்கிறேன்!" என்றாள்.

நான்வர இயலவில்லை என்று சொல்லிவிட்டேன். எனக்கும் இன்று உத்ஸாகமே இல்லை.

ஹர்த்தால் முடிவடைகிறவழியாகக் காணோம். சர்க்காருக்கு ஒன்றரைக் கோடி ரூபாய் ஆர்டருக்கு ஸப்ளைசெய்ய வேண்டும்; இன்னும் நான்கே பாதங்கள்தான் பாக்கி. இன்னும் பதினைந்து நாட்கள் தொடர்ந்தாற்போல ஹர்த்தால் நடந்தால் இருபத்தைந்து லக்ஷம் ரூபாய்கள் நஷ்டம் ஏற்படும். சர்க்கார் ஆர்டருக்கு சமயத்தில் ஸப்ளைசெய்ய முடியாது. ஜீலாலால் மீசையை முறுக்கிக் கொண்டு, கவர்னரின் லேடியோடு உட்கார்ந்து 'ஷாம்பெய்ன்' குடிப்பான். இருக்கும் இடம் தெரியாமல் நான் மங்கவேண்டியதுதான்.

ஆகையால்தான் நான் ஆதுரமாக இருக்கிறேன். என்னுடைய மனம் நிம்மதி இல்லாமல் துடிக்கிறது. மிஸ் மாரிஸனுடைய அதரபானம்கூட என்னுடைய அசாந்தியைப் போக்கடிக்காது. என்னுடைய உள்ளத்திலே வாழ்வுக்கும் சாவுக்கும் யுத்தம் நடக்கிறது. எந்த சுதந்திரத்தை அடைவதற்கு நான் ஏற்பாடுகள் செய்தேனோ அது இன்று ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறது. நான் இதை எப்படிச் சகிப்பேன்!

இன்று ஒரு நண்பர், 'இந்த ஏழைக் கூலிகளின் சம்பளத்தை உயர்த்தினால் என்ன? இவ்வளவு லாபம் சம்பாதிக்கிறீர்கள், அவர்களுடைய வயிற்றுக்கும் கொஞ்சம் கொடுத்தால் என் கஷ்டம் உங்களுக்கு? யுத்தகாலத்திலே விலைவாசிகள் உயர்ந்துபோய்விட்டன. அவர்கள் எப்படித்தான் வயிற்றை நிரப்புவார்கள்?" என்றார். பேச்சு ரொம்ப அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த பிரச்னை அவ்வளவுசுலபமாகத் தீர்க்கக்கூடியது அல்ல.

கொஞ்சம் ஆழ்ந்து இந்தக் கேள்வியை கவனிக்கட்டும். நான் முதலாளி. முதல் நான் போட்டிருக்கிறேன். அந்த முதலிலிருந்து லாபம் சம்பாதிப்பது என் பிறப்புரிமை; அதை எப்படி வேண்டுமானாலும் உபயோகிக்க எனக்கு பாத்யம் உண்டு. ஆனால் என்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது. என்னுடைய இஷ்டம்போல, சுதந்தரமாக நான் காரியம் செய்வதைப்பற்றிய விவகாரமல்லவா இது! நம்முடைய தேசம் பராதீனமானது. அதாவது சர்க்கார் விதேசி

முதலாளிகளின் கைக்குள் அகப்பட்டிருக்கிறது; நமக்கு நம் முன்னேற்றத்தில் அடிக்கடி தடுக்கிவிழவேண்டியிருக்கிறது; இன்று ஒட்டாவா ஒப்பந்தம் என்றால் நாளைக்கு இன்னொரு டாரிப்-சட்டம், இப்படி எதாவது வந்துகொண்டேயிருக்கிறது. அப்புறம் இந்த தொழிலாளி தலைவர்கள் இருக்கிறார்களே அவர்களுடைய காச்சல்களைக் கேட்டுக்கொண்டு, 'லேபர் லெஜிஸ்லேஷன்' 'பாக்டரி ஆக்ட்' 'ட்ரேடு யூனியன் ஆக்ட்' முதலியவைகள் செய்யப்பட்டு நமக்கு மேலுக்கு மேல் சிரமங்கள் உண்டாகிக்கொண்டேயிருக்கின்றன. வேலை நேரம் அதிகமாகக் கூடாது, சம்பளம் மாதா மாதம் ஏழாந் தேதிக்குள் கொடுத்தாகவேண்டும், முதலிய பிரதி பந்தங்கள் நம் தலையிலே சுமத்தப்படுகின்றன. தொழிலாளிகள் கேட்பதையெல்லாம் கொடுத்துவிட்டால் நமக்கு பாக்கி அல்ப சொல்பம் இருக்கிற சுதந்திரமும் தொலைந்துவிடும். கொஞ்சம் இடம் கொடுத்தால் மடத்தை பிடுங்கமாட்டார்களா இவர்கள்! இவர்களுடைய 'ஸ்லோகன்'களே அவர்களுடைய மனோபாவத்தைப் பிரதிபலிக்கின்றன. 'முதலாளித்வம் அடியோடு ஒழிக' 'தொழிற்சாலை யாருடையது? தொழிலாளிகளுடையது' இந்தக் கூச்சல்களால் அவர்கள் நம்முடைய தயவைக்கொண்டே நம்முடைய கழுத்தை அறுக்கப் பார்க்கிறார்கள் என்று தெரியவில்லையா? அவர்களிடம் கருணைகாண்பிப்பது பாம்புக்குப் பால் வார்ப்பது மாதிரித்தான். அப்புறம் மார்க்கட்டிலே போட்டிவேறு; இவர்கள் இஷ்டப்படி எல்லாம் வாரிக் கொடுத்துவிட்டு மார்க்கட்டிலே போய் என்னசெய்வது! ஜீவாலால், லக்ஷ்மீசந்த், ஹீராலால், ருஸ்தம்ஜீ எல்லோரும் மிகவும் மலிவாக சரக்குகளைக் கொண்டு வந்து தள்ளிவிடுவார்கள்; நான் திவாலாக வேண்டியதுதான். சே! சே! இந்தத் தொழிலாளிகளிடம் ஈவிரக்கம் காண்பிக்கக்கூடாது; அது சித்தாந்த விரோதம்.

நானும்தான் யோசனைசெய்து பார்க்கிறேன், இந்த ஸர்க்கார், இந்த சட்டம், இந்த நியாயம், சேனைகள், கச்சேரிகள், போலீஸ் இவைகளெல்லாம் முதலாளிகளுடைய சொத்துக்களைக் காப்பதற்காக இல்லாவிட்டால் பின் எதற்காக இருக்கின்றன? நம்முடைய சம்பத்துகளில் நமக்குள்ள அதிகாரத்தை ரக்ஷிப்பதற்காகத்தான் இருக்கவேண்டும்; ஆனால் விதேசி அரசாங்கமும், அதன் உத்யோகஸ்தர்களும் நம்முடன் சக்களத்தி குழந்தைகள் மாதிரி வியவகாரம் செய்கின்றன. சகிக்க முடியவில்லை இது தான். என்னுடைய வழி நேரான ராஜபாட்டை. என்னுடைய சுதந்தரத்தைப் பாதுகாக்கவேண்டுமானால், இந்தத் தொழிலாளிகளுக்கு ஹர்த்தால் செய்வதற்கும் அதிகச் சம்பளம் கேட்பதற்கும் கொஞ்சம்கூட சக்தி இல்லாமல் செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்கு சர்க்கார் பதவிகளைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டும்; அப்பொழுதுதான் சட்டம், நியாயம், சைன்யம், போலீஸ் எல்லாம் நமக்கு உபத்திரவம் வரும்போதெல்லாம் உதவிக்குவரும். இப்போது பிரிட்டன் யுத்தத்திலே அகப்பட்டுக்கொண்டிருக்கிறது; அதனுடைய உயிரே ஆபத்திலே சிக்கிக்கொண்டிருக்கிறது. தன்னுடைய சங்கடமான நிலைமையையெல்லாம் உத்தேசித்து பிரிட்டிஷ் சர்க்கார் நமக்கு இன்னும் கொஞ்சம் அதிகாரம் கொடுத்து தேசிய அரசாங்கம் ஸ்தாபிக்கும்படி செய்துவிட்டால், காந்திஜியும் சத்யாக்கிரஹத்தை நிறுத்தி விடுவார். யுத்தத்தினால் ஏற்பட்ட சந்தர்ப்ப செளகரியங்களை அனுசரித்து தொழில் முதலியவை வளர்ச்சியடையும். தொழிலாளிகள் அவர்களுடைய தலைவர்கள் எல்லோரையும் சரியாக கவனித்துக்கொள்ளலாம். ஆனால் இந்த பிரிட்டிஷ் முதலாளிகள் இருக்கிறார்களே ஒன்றுக்கும் கட்டுப்பட்டு வரமாட்டார்கள். காந்திஜி இப்போது என்ன செய்வார், சத்யாக்கிரஹத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் காங்கிரஸின் 'ராங்க் அண்டு பைல்' இந்த தொழிலாளர் தலைவர்களுடன் சேர்ந்துகொண்டு புரட்சிசெய்ய ஆரம்பித்துவிடுவார்கள். அவர்களுக்கு எப்போதும் 'கிளர்ச்சி' 'புரட்சி' இந்தப் பெயருள்ளவை எது

வாக இருந்தாலும் கிடைத்துக்கொண்டிருந்தால் போதும். இந்த தொழிலாளிகளை என்ன செய்வது? இவர்களிடம் நம்முடைய தலைவர்களின் தந்திர மந்திரங்கள் பலிக்கா. ஆகவேதான் இவர்களுக்குக் கொஞ்சம் கூட தயவு தாட்சண்யம் காண்பிக்கக்கூடாது. அவர்கள் கட்சி வேறு; நம் கட்சி வேறு; இரண்டுக்கும் ஒருநாளும் தோதுப்பட்டுவராது. முதலாளிகள் பிழைப்பதற்கு ஒரே வழி தொழிலாளிகளைத் தலைதூக்கவொட்டாமல் நசுக்குவதுதான்; இதுதான் என்னுடைய கடைசி தீர்மானம்; இந்த ஹர்த்தால் செய்கிறவர்களிடம் மிகக் கடுமையாக இருக்கவேண்டும்.

* * *

27 நவம்பர் 1940.

காலையில் எழுந்திருந்ததும் மாஜிஸ்ட்ரேட்டுக்கும், போலீஸ் ஸூபரிண்டெண்டுக்கும் போன்செய்தேன். இன்று சாயங்காலம் பங்களாவுக்கு வரும்படி கேட்டுக்கொண்டேன். சந்தோஷம் அடைந்துவிட்டார்கள்!

மாலையில் ரொம்ப உயர்தரமான லஞ்சுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். ஒண்ணாந்தரமான விக்கர் நிறைய வந்திருந்தது. மிஸ் ஆசாலதாவின் நடனத்திற்கு ஏற்பாடு செய்திருந்தேன். எல்லாம் ரொம்ப விமரிசையாக நடந்தது. ஆசாலதா அழகு என்று சொல்வதற்கில்லை; ஆனால் உடம்பிலே எலும்பே தெரியவில்லை; மினு, மினு என்று இருந்தாள், விரகதாபம், அது, இது எல்லாம் அபிநயம் பிடித்தாள். சமுத்திரத்தில் அலைகள் ஆடுவதுபோல அவளுடைய கைகால்கள் எல்லாம் லயத்துடன் அசைந்தன. எழுவதும், விழுவதும், மறுபடி எழுந்து வேகமாக மோதி மறைவதுமாக எப்படி சமுத்திர அலைகள் தோன்றுகின்றனவோ, அப்படியே அவளுடைய கைகள், கால்கள், மேனி எல்லாம் தோன்றின. மனதைக் கொஞ்சம் கலக்கித்தான் விட்டாள்; கெட்டிக்காரி!

மாஜிஸ்ட்ரேட்டும், ஸூபரிண்டெண்டும் குடி மயக்கத்திலே நடனத்தைப் பார்த்துக்கொண்டு ஆடிக்கொண்டிருந்தார்கள்; உத்ஸாகம் தாங்க முடியவில்லை இரண்டு பேர்களுக்கும்.

ஆசாலதாவை டிஸ்மிஸ் செய்துவிட்டு, நாங்கள் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். மாஜிஸ்ட்ரேட் ஒரு அசடு; இப்போதுதான் புதிதாக வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார். இன்னும் லண்டன் ஈஸ்ட்எண்ட், லிவர்பூல், பர்மிங்ஹாம், ஸௌத் வேல்ஸ் காட்சிகள் மறக்கவில்லை. ஆகையால் ரொம்பவும் கருணையுடையவராக நடந்துகொள்ள வேண்டுமென்று கனவுகண்டு கொண்டிருந்தார். நடுநடுவே, "சாந்தமாக இருக்கும் தொழிலாளிகளுடன் எப்படி நாம் கடுமையாக நடந்துகொள்ள முடியும்? பீஸ்புல் பிக்கட்டிங் சட்டப்படி செய்யக்கூடியதுதானே. தொழிலாளிகள் ஒருவரையும் மிரட்டவில்லை என்பதை நானே கண்டேன், எப்படி நாம் ஹர்த்தாலை கலைக்கிறது?" என்று கேட்டார். "நீங்கள் தொழிலாளிகளின் சில கோரிக்கைகளை நிறைவேற்றுவதுதானே, நாங்கள் மத்தியஸ்தம் செய்கிறோம்" என்றுகூட சொன்னார். நானும் அவருக்கு என்னாலானதைச் சொன்னேன். இன்று தொழிலாளிகள் கட்டுப்பட்டு வந்தால் நாளைக்கும் அவர்கள் அடங்கி இருப்பார்கள் என்பதற்கு என்ன ஆதாரம்? அவர்களுடைய தலைவர்கள், புரட்சிக்காரர்கள், கம்யூனிஸ்ட்ஸ். மேலும் நான் தொழிலாளிகளுடைய கோரிக்கைகளுக்கு இணங்கினால் இன்னும் அழுத்தமாக கிளர்ச்சியின்வேர் ஊன்றிக்கொள்ளும்; இந்த வெற்றி கம்யூனிஸ்ட்ஸிடம் தொழிலாளிகளுக்குள்ள நம்பிக்கையை அதிகமாகச்செய்யும். இந்தக் கம்யூனிஸ்ட்கள் நகர காங்கிரஸ் கமிட்டியைவேறு பிடித்துக்கொண்டு விட்டார்கள்; எங்களுக்கு அதிலே இருந்த அதிகாரம் எல்லாம் போயே போய்விட்டது. இதன் முடிவாக, காந்திஜியின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக காங்கிரஸ் கமிட்டி வெளிப்படையாகவே

ஹர்த்தாலை ஆமோதிக்கிறது; மூட்டை மூட்டையாக ஆகாரசாமான்களை ஹர்த்தால் செய்கிறவர்களுக்கு அள்ளி வீசுகிறது. இப்படி காங்கிரஸ் கமிட்டி தெம்பு ஊட்டுவதினால் ஹர்த்தால் ப்ளேக் மாதிரி நகரத்திலே உள்ள எல்லா மில்களுக்கும் பரவிவிடும்; அவரவர்கள் வேலை வித்து இல்லாமல் இருப்பார்கள். சர்க்காரின் 'வார் எபர்ட்'டுக்கு வரும் இடைஞ்சல். ஏனென்றால் நாங்கள் ஆர்டர்படி ஒன்றும் ஸப்ளை செய்யமுடியாது அப்புறம் நிலைமை சமாளிக்க முடியாமல் போனாலும் போய்விடும், யார் கண்டார்கள்?

இத்தனையும் சொன்ன அப்புறம்தான் இந்த அசட்டு மாஜிஸ்ட்ரேட்டுக்கு மூளையிலே பட்டது, நகரம் ஆபத்தான நிலைமையிலே இருக்கிறது என்று. ஸூபரின்டென்டெண்டும் தம்முடைய குற்றத்தை உணர்ந்து கொண்டார்; தொழிலாளிகள் சாந்தமாக ஹர்த்தால் செய்தாலுங்கூட, வெளிப்படையாக கலகம் ஒன்றும் நடக்காவிட்டாலும் கூட, போலீஸ் தன்னுடைய கடமையைச் செய்யவேண்டும் என்பதை உணர்ந்தார்.

அதன் பிறகு, உடனே ஆகவேண்டியவைகளைச் செய்வதாக வாக்களித்துவிட்டு அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் கடமையைப் போதித்து அனுப்பின பிறகு, களையாற்றிக்கொள்ள இன்னொரு விஸ்கி பாட்டிலை திறக்கச் சொல்லிவிட்டு, ஆசாலதாவையும் வரவழைத்தேன்........

* * *

29 நவம்பர் 1940.

இன்று ஹர்த்தால் முடிவடைந்தது. ரொம்ப சிரமம். இன்றுதான் திருப்பவும் சாந்திகிடைத்தது. மாஜிஸ்ட்ரேட் அவ்வளவு அசடு இல்லை; கெட்டிகாரர் தான். முந்தாநாள் மில் ஏரியாவில் ஸெக்‌ஷன் 144 பிரயோகித்தார். தொழிலாளிகள் மீட்டிங்போட முயன்றபோது அவர்களுடைய தலைவர்களை யெல்லாம் கைது செய்து விட்டார், கூட்டத்திலே லாதி சார்ஜ் செய்ய உத்தரவிட்டார். கம்யூனிஸ்ட்களை யெல்லாம் பிடித்துக் கொண்டுபோய்விடச் செய்தார். தொலைந்து ஒழிந்தன சனியன்கள்! சில காங்கிரஸ்காரர்களையும் கூட இழுத்துப் போகும்படி நேர்ந்தது. நேற்று, ஹர்த்தால் செய்தவர்களின் தாது இறங்கிப் போய்விட்டது. மாஜிஸ்ட்ரேட்டின் முன் யோசனைப்படி, நானும் ஹர்த்தால் செய்தவர்களுக்கு அநுதாபம் காண்பிப்பதாகவும், சம்பளத்தை அதிகரிப்பதுபற்றி ஆலோசனை செய்யப்படும் என்றும் தெரிவித்தேன். அபீஷியல் ரிகார்டுகளை சரியாக வைத்துக் கொள்வதற்காகவும், தொழிலாளிகளின் நல்லெண்ணத்தைத் திரும்பவும் பெறுவதற்காகவும் இந்தக் கட்டுப்பாடு கொஞ்சம் வேண்டித்தானிருந்தது; ஹர்த்தாலை நிறுத்துவதற்காக நான் கொஞ்சம் நயமாக இருக்கும்படி நேர்ந்தது. தொழிலாளிகளின் 'ரிங்-லீடர்'களாக இருந்தவர்களை இந்த மாதமே வேலையை விட்டு நீக்கிவிட வேண்டும்; மற்ற காரியங்களை மாஜிஸ்ட்ரேட்டே கவனித்துக் கொள்வார். சம்பளம்? சம்பளத்தை யார் உயர்த்தப்போகிறார்கள்? நாம், வியாபாரிகள். வாக்குத்தத்தத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்க முடியுமா? வார்த்தை சுத்தமாக இருக்க வேண்டும் என்று நினைப்பதெல்லாம் காந்திஜீ மாதிரி இருப்பவர்களுக்குத் தான்! இனிமேல் இந்தத் தொழிலாளிகள் ஹர்த்தால் செய்வதென்று நினைக்க முடியுமா? ஹர்த்தால் அடிக்கடி செய்வதென்பது சாமான்ய மானதல்ல, அவ்வளவு எளிதல்ல.

* * *

30 நவம்பர் 1940.

இந்த ஹர்த்தால் பப்ளிக்கில் என் கண்ணியத்தைக் குறைத்து விட்டது. 'பாய்காட்டி'னால் நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் ஏதாவது ஒரு உபாயம் செய்யாவிட்டால் என்னுடைய மதிப்புப் போய்விடும். பத்திரிகைகள் என்னைப்பற்றிக் கன்னாபின்னா வென்று

எழுதியிருக்கின்றன. ஏன் இந்தப் பத்திரிகைக்காரர்கள் தங்கள் சுய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களைப்பற்றி இப்படி எழுதுகிறார்கள்? அவர்களும் முதலாளிகள், நாமும்தான் முதலாளிகள்! அவர்கள் சின்ன முதலாளிகள், நாம் பெரிய முதலாளிகள்; இருந்தாலும் அவர்கள் முதலாளி வர்க்கத்தைக் காட்டிக்கொடுக்கலாமோ? மூட ஜனங்களிடம் தங்கள் பத்திரிகைகள் 'பாபுலர்' ஆகவேண்டுமென்று எழுதுகிறார்கள் அப்படி. அவர்களுக்கு வேறு என்ன கவலை? காற்று வீசுகிறபக்கம் தூற்றுகிறவர்கள்தானே அவர்கள்! இப்படியெல்லாம் செய்துகொண்டு ஆகிவிடுகிறார்கள். காங்கிரஸ்மென், ராஷ்ட்ரவாதிகள்! ஸத்யம் அஹிம்ஸை எல்லாவற்றையும் காற்றிலே பறக்கவிட்டுவிடுகிறார்கள். இந்த ஹர்த்தாலின் உண்மையான நிலைமையை ஆராய்ந்து பார்த்தார்களா, நான் மனதிலே என்ன நினைக்கிறேன் என்று தெரிந்துகொள்ள முயன்றார்களா? அது ஏது? அவர்கள்தான் மேம்புல்லு மேய்கிறவர்கள் ஆயிற்றே!

இந்தப் பத்திரிகைகளின் வாயைக் கட்ட ஏதாவது வழி செய்யவேண்டும். ஏனெனில் மத்தியவர்க்க ஜனங்கள் தான் நமது சாமான்களை வாங்குகிறார்கள்; அவர்களைக் கிண்டி விட்டுக்கொண்டே தான் பத்திகைகள் பிழைத்துவருகின்றன. வழிதெரியும்! இன்று பட்ஜட்டைப் பார்த்தேன். விளம்பரத்திற்காக 1,350,000 ரூபாய்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன; அதில் சுமார் எட்டு லக்ஷம் மட்டுமே செலவாகியிருக்கிறது; பாக்கி கிட்டத்தட்ட ஐந்தரை லட்சம் ரூபாய்கள். வருஷம் முடியப்போகிறது. ஆகவே, ஊமை, செவிடுகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் திறக்க ஒரு லக்ஷம் ரூபாய், தர்மசாலை, சத்திரம் இவைகளுக்கு இருபத்தையாயிரம் ரூபாய், ஆர்ட் ஸ்கூல் திறக்க ஒரு லக்ஷம், ஜனரல் ஆஸ்பத்திரியில் இருபது பெட்கள் உள்ள ஒரு வார்டு கட்ட ஐம்பதாயிரம் ரூபாய் மேனாடுகளுக்குப் போய் 'டெக்னிகல்' படிப்பு ஐந்து வருஷம் படிக்க ஒரு மாணவனுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்காக யூனிவர்ஸிடிக்குப் பதினாயிரம் ரூபாய், சங்கீதக்கலை அபிவிருத்தியாவதற்காக ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்த பதினையாயிரம் ரூபாய், லூனடிக் அஸைலத்திற்கு ஐம்பதினாயிரம் ரூபாய், ஹரிஜன உத்தாரணத்திற்காக இருபத்தையாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும். மூன்றே முக்கால் லக்ஷம் ஒரேயடியாக தான தருமம் செய்தால் பத்திரிகைகளிலே படம் போடுவார்கள். என்னுடைய உதாரஹிருதயத்தையும், கலையிலும் கல்வியிலும் உள்ள ஆர்வத்தையும் பற்றிப் புகழ்ந்து பாடுகிறார்கள். இந்த ஹர்த்தால் ஞாபகம் யாருக்கு வரும்? இன்று இந்தப் பத்திரிகைகளின் சூழ்ச்சியால் ஏமாந்து, 'நான் நாசமாகப் போகவேண்டும்,' என்று பப்ளிக் நினைத்தால், நாளைக்கு என்னுடைய தானதருமங்களைக்கண்டு வாயார மனமார வாழ்த்துகிறார்கள். பொதுஜனங்களுடைய போக்கை அனுசரித்துப் பத்திரிகைகளும் என்னை ஸ்தோத்திரம் செய்கின்றன. மகாநாடுகள், சபைகள் எல்லாவற்றுக்கும் தலைமை வகிக்க என்னை நமஸ்காரம் செய்து அழைத்துப் போவார்கள்! பொதுஜன அபிப்பிராயத்தை நாம் இஷ்டம்போல இப்படியும், அப்படியும் மாற்றிக்கொள்ளலாம். அப்புறம் காங்கிரஸிலும் மதிப்பு ஏற்படுகிறது; அப்புறம் ஹர்த்தாலில் ஒரு கதர் குல்லாய் கூடத் தேடினாலும் அகப்படாது! இனிமேல் ஸ்கூல், காலேஜ்களிலிருந்து பரிசளிப்பு விழாக்களுக்காகவரும் அழைப்பு ஒன்றையும் விடக்கூடாது. பிரைவேட் ஸெக்ரட்டரியிடம் சொல்லிவைத்திருக்கிறேன், தலைமைப் பிரசங்கத்திற்காகப் உயர்ந்த லக்ஷ்யங்களான விஷயங்களைப் பொறுக்கித் திரட்டி வைக்கவேண்டுமென்று.

* * *

7 டிஸம்பர் 1940.

இரண்டு மூன்று நாட்களாக டெலிபோனைவிட்டு காதை எடுக்க ஒழியவில்லை. எல்லாவிடங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. டெலிகிராம்கள் போர்போராக

வந்து குவிந்துகொண்டேயிருக்கின்றன. இந்தியாவின் பெரிய, பெரிய பத்திரிகைகளில் என்னுடைய தர்மசிந்தனை சமூக ஸேவை, தேசபக்தி, கலைச்சுவை, உதார குணம் எல்லாவற்றையும் பற்றித் தலையங்கங்கள் வெளியாகி இருக்கின்றன. சில, தமது பழைய அபசப்தங்களை வாபஸ் பெற்றுக்கொண்டு, வருத்தம்தெரிவிக்கின்றன. கவர்னர் முதல் தேசத்தின் பெரிய தலைவர்கள்வரை எல்லோரும் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். ஸேட் ஜீவாலால்கூட அனுப்பியிருக்கிறார்; பாபம், மனதிற்குள்ளே வெந்து, நொந்துகொண்டிருப்பார்.

விமலாதேவி இங்கேயே இருக்கிறாள். அவள் வந்ததும் 'டார்லிங்! ஹௌ ஜெனரஸ்! ஹௌ கிரேட்! ஐ லவ் யூ ஆல் தி மோர்!' என்று சொன்னாள். நேற்று ரொம்பக் கட்டாயப்படுத்தி பிக்சருக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டாள்.

மிஸ் மாரிஸன்! அவளுடைய அதரஸம் இப்போது முன்னைவிட இன்னும் மதுரமாக இருக்கிறது. ஆ, இப்போது என்னைவிட வைபவசாலி வேறு யார் இருக்கமுடியும்? வாழ்க்கையே வாழ்க்கை!

சுபம்

வழக்கம் போலவே—

ஸரஸ்வதி பூஜா மலர்!

டாக்டர் உ. வே. சாமிநாதையர் 'தமிழ் வளர்ச்சி'

சம்பந்தமாக இயற்றியுள்ள பாடல்கள்

பிரபல மறுமலர்ச்சி எழுத்தாளர்களுடைய கதைகள்

கவிதைகள் முதலியன

சிறுவர்களே எழுதிய கதைகளைக் கொண்ட

சிறுவர் பகுதி!

எருமை கண்ட கனவு

[சிறுவர்களுக்காக ஸம்ஸ்கிருதத்தி
லிருந்து மொழிபெயர்த்தது]

ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.

ஒரு குடித்தனக்காரரின் எருமை கடா மற்ற கொட்டில் தோழர்களுடன் புல்மேயக் கொண்டு போகப்பட்டது. மேய்க்கும் பையன் மரத்தடியில் நித்திரை போனான். வெகுநேரமாயிற்று மாடுகள் பலவாறாக பிரிந்து திரிந்து கொண்டிருந்தன. எருமைக்கு திடீரென்று குஷி பிய்த்துக்கொண்டது. எடுத்தது ஓட்டம் நாலுகால் பாய்ச்சலில் ஊர் வெளிதாண்டி நஞ்சையிலும் புஞ்சையிலும் விழுந்தோடி வாய்க்கால் வரப்புகளைக் கடந்து வெகுதூரம் போய் விட்டது. பல மைல்களுக்கப்பால் ஆற்றுப்படுகையில் காடுபோல் நெருங்கிய நெட்லிங்கப் புதர்களுக்கு இடையே களைப்பாறப் படுத்துக்கொண்டது. வயிராரத்தின்றிருந்தமையாலும், நிழலின் ஸௌக்கியத்தாலும், எருமை தூங்கவாரம்பித்தது. உடனே தான் ஒரு காட்டில் இருப்பதாக கனவு கண்டது. சிரமபரிஹாரம் ஆனவுடன் எழுந்து அக்காட்டில் சஞ்சரிக்கலானது. தன்னிஷ்டப்போல் மேய்த்து வலுவு பெற்றது. உடம்பு மினுமினு என்று ஆகிவிட்டது. திமிர் அதிகமாயிற்று. கம்பீரமாக சுற்றுமுற்றும் பார்த்து கர்ஜித்தது. பயமின்றிக் கானகத்தில் திரிந்தது. இதன் தீரத்தைக் கண்டு மிருகங்கள் வியப்புற்றன. சில பயந்தோடின. சில தயங்கின. பல இதனைச் சரணமடைந்தன. நாளடைவில் மஹிஷம் அரசியல் நடத்தவாரம்பித்தது. தன் பரிவாரங்களைத் திட்டப்படுத்திக்கொண்டது. மந்திரிகள் மெய்க்காப்பாளர்கள், நண்பர், அபயம் வேண்டுவோர், அதிதிகள், அடிமைகள், துதிபாடுவோர், என்பவர்களும் மற்றும், பலரும் ஏற்பட்டார்கள். ஆஸ்தான மண்டபத்தில் உட்கார்ந்து மஹிஷேச்வரன் பெண்நரிகள்பாட கழுதை நாட்டியமாடுவதைக் கண்டு களித்தது. அருகில் தென்பட்ட மஹிஷிகள் அழகாய் வீற்றிருந்தனர். நாய்கள் காவல் புரிந்தன. ஆடுகள் குதிரைகள் அகார, இகார பறவை ஜாதிகள் பேசும் குரல்களுடன் துதிபாடின, ஸிம்மங்கள் தூர ஒளிந்து நின்று பயத்துடன் எட்டிப் பார்த்தன. எருமை நாதன் தினம் இருமுறை குட்டைகளில் ஸ்நானத்திற்கு இறங்கினது. தனக்கென்று காவல் வைக்கப்பட்ட குட்டைகளில் சேறு கலங்கிய ஜலத்தில் கழுத்தளவு முழுகி கொம்புகளை சடபடவென்று அடித்துக் கொண்டு மஹிஷிகளுடன் ஜலக்ரீடை செய்தது. மஹிஷ பூபதியை தினந்தோறும் புற்கட்டுக்கள் கொண்டு பார்க்கவந்தவர் பலர், அன்னவர்கட்கு தர்சனம் கொடுத்தது. அது எப்பக்கம் திரும்பினாலும் கிங்கரர்களான நாய் நரிவர்க்கங்கள் கைகட்டி வாய்பொத்தி உடல் வணங்கி நடுங்கி நின்றன.

நாளடைவில் மஹிஷேச்வரனுக்கு ஒரு சோனி நாயிடம் ப்ரீதிமேலிட்டது. பிரபுவின் பிரஸாதத்திற்கு பாத்திரனானான். சோனிநாய் பிரதான மந்திரியானது. மந்திரி தீக்ஷ்ண புத்தியுடையது எஜமானிடம் விச்வாஸம் கொண்டது. எஜமானுடைய காரியத்தில் உயிரையும் கொடுக்கத்தயாராக இருந்தது. அதற்கு தயை தாக்ஷிண்யம் என்பது கிடையாது. கத்திமுனைபோல் கூர்மையான குணம். இப்படி அப்படி என்று ஸந்தேகம் ஏற்பட்டால் ஐயமற அறுத்தேவிடும். ராஜ்யதந்திரி. நாயானாலும் குரைப்பது குறைவு. கபடத்தில் குள்ளநரி. இம்மந்திரியின் மதிவன்மையால் மஹிஷராஜீகம் வலுத்தது. விதம் விதமாக குடிபடைகள் பாதமலர் வந்தடைந்தார்கள். ஸ்வஜாதியான மஹிஷங்கள் வெகுவாகக்கூடின. வேறு கானகங்களி

லிருந்து வந்த இனத்தவர்கள் புலிகளின் கொடுமைகளைப்பற்றி பயங்கரமாக வர்ணித்துக்கொண்டிருந்தன. மஹிஷ ராஜன் மந்திராலோசனை ஸபை கூட்டியது.

அதில் பலவாறு பேச்சுக்கள் நடந்தன. கடைசியாக சோணி நாயாகிய மந்திரி பேசியதாவது "சிங்கம் புலி கரடிகள் மனிதர்களுக்குத் தான் பயப்படுகின்றன. நாம் மனிதர்களுடன் பழகுபவர்கள். நாம் காட்டுப்பிராணிகளல்ல, வீட்டுப் பிராணிகள். மனிதர்களின் பழக்கவழக்கங்களை நன்கறிந்தவர்கள். அவர்களின் விச்வாஸத்தைப் பெற்றவர்கள். காட்டுப் பழக்கமும் நாட்டுப் பழக்கமும் இரண்டும் நமக்கு உண்டு. நம்மை ஜயிக்க யாரால் முடியும்? ஆனல் நாம் செய்துகொள்ள வேண்டியது ஒன்று உண்டு. நாட்டவர்கள் நம்மைப்பார்த்தால் காட்டுப் பிராணிகளாய் காட்டவேண்டும். காட்டு மிருகங்கள் நம்மைப்பார்த்தால் நாட்டவர்கள் என்று மதிக்கும்படி இருக்க வேண்டும். இப்படி இருப்போமானல் நமக்கு ஒருபக்கமும் பயம் கிடையாது எல்லாரும் நமக்கு வச்யர்கள். நம் ராஜ்யம் எக்காலும் நிலைநிற்கும். இப்போது நாம் காட்டில் இருப்பதால் நாட்டவர்கள்போல் நடித்து காட்டு மிருகங்கள் நம்மைத்தீண்டா வண்ணம் செய்துகொள்ள வேண்டும். அதற்கு என்ன யுக்தி என்ருல், யோசித்துப் பாருங்கள். மனிதர்களுக்கும் நமக்கும் எந்த விதத்தில் பேதம்? அவர்கள் சாப்பிடுகிருர்கள். நாம் சாப்பிடவில்லையா? அவர்கள் படுத்து தூங்குகிருர்கள். நாம் படுத்துத் தூங்கவில்லையா? எல்லாம் ஒன்றுதான். ஆனல் அவர்கள் உடை உடுக்கிருர்கள் நாம் முண்டமாய் திரிகிறேம். இந்த விஷயத்தில் காட்டு மிருகங்கள் நம்மைத் தங்களைப்போல் மதித்துவிட ஹேது இருக்கிறது. ஆதலால் இதை மாற்றிக்கொள்ள வேண்டும் ஏன் நாம் உடை உடுக்கலாகாது? பட்டாடைகள் அணிந்து கொண்டால் நம் அரசியல் அதிகாரிகளுக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கும்? ஏன் எனக்குக் கூடத் தலையில் ஒரு முண்டாசு எறினல் வெகு அந்தமாய் தானிருக்கும். சோணி நாயன மஹாமந்திரியின் ஸித்தாந்தத்தை எல்லோரும் ஆமோதித்தனர். காட்டில் இருந்த வேடர்களைக்கொண்டு மஹிஷிகளின் பால் குடங் குடமாக கிராமங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டது. சாணம் முட்டைகளாகி பொன்னுக திரும்பி வந்தது. மஹிஷ ராஜாவின் பொக்கிஷம்நிறைந்தது. ஆடைகள் வாங்கப்பெற்றன. ஆபரணங்களும் ஏற்பட்டன. பட்டாடை, குட்டை, சட்டை எல்லாம் வந்து குவிந்தன. வேடர்கள் மஹிஷ வர்க்கங்களுக்கு "டிரஸ்" பண்ணி விட்டார்கள். இந்தக் கூத்து அதிகநாள் நடக்குமுன் கிராம ஜனங்கள் கவனிக்க ஆரம்பித்து விட்டார்கள். வேடர்களின் வரத்துப் போக்கினல் அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இதன் மூலம் துப்பறிய வந்தவர்கள் சில நாட்கள் முன் கெட்டுப் போன தங்கள் எருமைகளில் சில வற்றை அக்கூட்டத்தில் கண்டு வேடர்களுக்கு பயந்து கிட்ட நெருங்காமல் அரசனிடம் முறையிட்டார்கள். அரசன் வேடர்களை வெருட்டி விசாரித்தான். வேடர்கள் நாங்கள் மாடு திருடுபவர் அல்ல, பால் கரந்து விற்றது குற்றமென்றும் சொல்லி அரசன் பாதங்களில் பணிந்தனர். பின்பு அரசன் உத்திரவின்பேரில் வேடர்களும் பல சேவகர்களும் விரைவில் சென்று குரைக்கும் நாய்களை அடித்து கொன்று விட்டு மஹிஷங்களையும் அவைகளின் ஆடை ஆபரணம் பொக்கிஷங்களையும் திரட்டி ராஜ சமூகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். மாட்டுக்காரர் தங்கள் மாடுகளை பார்த்து ஓட்டிக் கொண்டு போனர்கள். மிகுந்த மாடுகள் அரண்மனைக்கு சேர்க்கப்பட்டன. மஹிஷராஜனை அதன் எஜமான் வந்து தடியால் அடித்து தும்புப்போட்டு கட்டி இழுத்தான்.

மஹிஷம் துயில்விட்டெழுந்து மௌனமாய் எஜமானுடன் வீடு சென்றது.



யுக்தி பலித்தது

‘கீரன்’

ஒரு காட்டில் ஆடு ஒன்றிருந்தது. அதன் பெயர் கரடகன். அது யாரிடமும் பயமில்லாமல் காட்டில் மனம் போனபடி சுற்றி வயிறு நிறைய ஆகாரம் செய்து வந்ததால் நன்ருக கொழுத்திருந்தது. கரடகன் எவ்வளவுக்கு எவ்வளவு கொழுத்ததோ அதற்குத் தகுந்தபடி அதன் தாடியும் அடர்ந்து நீட்டாக வளர்ந்திருந்தது. அது பார்ப்பதற்கு ஆடுபோல் இல்லாமல் பயங்கரமாக இருந்தது.

அடுத்த காட்டில் வக்ரதந்தன் என்று ஒரு சிங்கம் இருந்தது. அதற்கு ஒருநாள் வயிற்றுக்கு உணவே கிடைக்கவில்லை. காலைமுதல் சாயங்காலம் வரையில் தான் வசிக்கும் காட்டில் ஆகாரத்திற்காகச் சுற்றியலைந்த வக்ரதந்தன் அஸ்தமனவேளையில் கரடகன் வசிக்கும் காட்டில் புகுந்து பசியின் கொடுமையால் ஆத்திரத்தோடு அங்குமிங்கும் ஓடிற்று. அப்போது தெய்வச்செயலாகக் கரடகன் அதன் கண்ணில் பட்டுவிட்டது. உடனே சிங்கத்திற்கு ஆனந்தம் பொங்கிக்கொண்டு வந்தது.

“ஸரி இது ஒரு கொழுத்த ஆடானதால் நமக்கு இன்றைக்கு வயறு நிரம்ப ஆகாரம் கிடைத்தது” என்று மனதிற்குள் சந்தோஷங்கொண்ட வக்ரதந்தன் வேகமோடு ஆட்டை நெருங்கியது. தூரத்திலேயே சிங்கத்தைப் பார்த்துவிட்ட ஆடு திகிலோடு அசைவற்று நின்றுவிட்டது. “ஸரி

இன்று நம் உயிர் தப்பாது.'' என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்ட ஆடு அகஸ்மாத்தாக கனைத்தது. சமீபத்தில் நெருங்கி வந்த சிங்கமோ ஆட்டின் தாடியையும் அது கனைத்ததையும் கண்டு மனதில் கொஞ்சம் சந்தேகம் கொண்டு இரண்டடி பின்னல் நகர்ந்தது. அதைக்கண்ட ஆட்டுக்குத் தைரியம் பிறந்தது.

''சிங்கம் நம்மைத் தின்று விடப்போவதில் சந்தேகம் இல்லை. சாகப்போகும் நாம் ஒரு தந்திரம் செய்து பார்ப்போம். தெய்வத்தின் கிருபை இருந்தால் தப்பலாம்'' என்று தீர்மானித்துக்கொண்ட கரடகன் துணிச்சலுடன் கலகல வென்று சிரித்தது. சிங்கத்திற்குக் கொஞ்சமாக இருந்த சந்தேகமும் பயமும் வலுத்தது. ஆட்டைப் பார்த்துத் தழு தழுத்த குரலில் ,எதற்காக சிரித்தாய்?'' என்று கேட்டது சிங்கம்.

''வெகுநாளாக நான் ஒரு நோன்பு (விரதம்) வைத்திருந்தேன். அதற்காகத்தான் இந்தத்தாடி வளர்க்கிறேன். இன்று அந்த நோன்பு பூர்த்தியாகும் காலம் ஆகிவிட்டது. அதை எண்ணித்தான் சந்தோஷம் தாங்காமல் சிரித்தேன்'' என்று கையையும் காலையும் ஆட்டிக் கூறியது ஆடு.

''அது என்ன விரதம்? சொல் கேட்கலாம்'' என்றது சிங்கம்.

''சொல்கிறேன் கேள். ஒரு யானை, 100 புலி, இருபது எருது, ஒரு சிங்கம் இத்தனையும் சாப்பிட்டு விட்டுத் தான் இந்தத் தாடியை எடுப்பது என்பதே என் நோன்பு அதன்படி இதுவரையில் ஒரு யானை, 100 புலி, 20 எருது எல்லாம் புசித்து விட்டேன். சிங்கம்தான் கிடைக்கவில்லை. அதற்காக நான் வெகு நாட்களாக எங்கெல்லாமோ தேடி அலைந்தேன். நல்லவேளையாக நீயே வலுவில் வந்து சிக்கிக் கொண்டாய். இன்றோடு என் விரதம் பூர்த்தி ஆகிவிடும். இரு இரு இதோ மடுவுக்குப் போய் ஸ்நானம் செய்து வருகிறேன்'' என்று கூறி உடம்பை ஒருதடவை சிலிர்த்துக் கொண்டு கனைத்த வண்ணம் சிங்கத்தை நோக்கி இரண்டொரு அடி தூரம் நடந்தது தான் தாமதம், ''ஓகோகோ! இது ஆட்டுக்கடா இல்லை. ஏதோ அபூர்வ மிருகம். ஆடாக இருந்தால் நம்மிடம் இவ்வளவு துணிச்சலாகப் பேசுமா? இது நம்மையே கொன்று தின்றாலும் தின்று விடும். நாம் ஒரேபாய்ச்சலில் ஓடிப்போய்விடுவதே நல்லது'' என்று தீர்மானித்துக்கொண்ட சிங்கம் எடுத்ததே ஓட்டம்! திரும்பியே பார்க்கவில்லை. தன் காட்டில்

போய்தான் நின்றது. சிங்கம் ஓடினதைக்கண்டு குலுங்கக் குலுங்க நகைத்த கரடகன் எப்போதும்போல் பயமில்லாமல் காட்டில் வசித்துவந்தது.

குழந்தைகளே! ஆட்டைக் கண்டு சிங்கம் எங்காவது பயப்படுமா? அதற்குக் காரணம் என்ன? கரடகனின் கொழுத்த சரீரமும் அடர்ந்து நீண்டுவளர்ந்த தாடியுந்தான் ஆனால் அதைவிட மற்றொரு முக்கிய காரணம் இருக்கிறதே தெரிந்ததா? அதுதான் சமயோசித புத்தி! அது அவ்வளவு தூரம் தைரியமாக யுக்தியுடன் விரதம் என்று பொய் விஷயத்தைச்சொல்லி ஏமாற்ருவிட்டால் அதன் கதி என்ன ஆகியிருக்கும்? அதற்குத்தான் எப்போதும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்; அதிலும் ஆபத்தான சமயத்தில் புத்திசாலித்தனத்தோடு தைரியமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பது. நீங்களும் சமயோசித புத்தியுடனும் நடந்துகொண்டால் சுகமாக வாழ்வீர்கள்.

கடவுள் மாமா

காழி 'மணி'

ஒரு சிறு கிராமம். பக்கத்தில் காடுகள் அதிகம். மரம் வெட்டி ஜீவனம் செய்பவர்கள் பலர் வசித்து வந்தனர். ஒருகுடிசையில் ஒரு நாள் இரவு பத்துமணிக்கு வெளிக் கதவைத் தட்டிய சப்தம்கேட்டது. யார் எனப்பார்க்க ஒரு வயதான மனிதனும், அவன் ஒரே மகனும், ஓடிப்போய்க் கதவை திறந்தனர். குடிசையின் வாயிலில் நின்றவர் நல்ல உடையுடன் கம்பீரமாக " நானிருப்பது மதுரை இருட்டில் வழிதவறி இங்கு வந்துவிட்டேன். பசி காதையடைக்கிறது. ஏதாவது கொஞ்சம் வயிற்றுக்கு ஆகாரம் வேண்டும். இரவு படுக்கவும் இடந்தர வேண்டும்" எனக் கேட்டனர்.

பையனும் தந்தையும் தங்கள் இருவருக்கும் வைத்திருந்த அன்னத்தை விருந்தினருக்குப் பங்கிட்டுக் கொடுத்தனர். வயிறுநிரம்ப உண்ட விருந்தாளி "அன்பர்களே! அகதிக்கு தெய்வம் துணை. நீங்கள் என் பசியை நீக்கினீர்கள், உங்கள் குறையை இறைவன் நீக்கு

வார்'' என்று சொல்லி இரவு முழுவதும் படுத்து நன்றாய்த் தூங்கினர்.

பொழுது விடிந்தது. வழிப்போக்கன் 'என் அன்பர்களே நீங்கள் செய்த உபகாரத்திற்கு நான் என்ன பிரதி செய்யப் போகிறேன்? ஞலும், இந்த ஒரு ரூபாயை அதற்கு வைத்துக்கொள்ளுங்கள். நான் போய்வருகிறேன்.' என்ருன். அதற்கு விறகுவெட்டி "ஐயா, தாங்கள் செய்ததை இன்னொரு முறை செய்யாதீர். எங்கள் தருமம் நாங்கள் சிறிதளவு செய்தோம் அது ஒரு பாக்கியந்தான், அதற்காக தாங்கள் இந்த ரூபாய் கொடுப்பது சிலாக்கியமல்லவே. தயவு செய்து ஒன்றுமில்லாததைப் பெரிதாய்க் கூறவேண்டாம்'' எனச்சொல்லி ரூபாயை வழிப்போக்கனிடமே கொடுத்து விட்டனர்.

வழிப்போக்கன் மிகச் சந்தோஷத்துடன் வழி நடந்தான். போகிற வழியில் தன் பணப்பையை நழுவவிட்டு விட்டான். ஏன் தெரியுமா? விறகுவெட்டியின் பெருந்தன்மையையும்பையனின் உத்தம குணத்தையுமே நினைத்து நினைத்து தன்னை மறந்தான். பணப்பையைப்பற்றி ஞாபகமேயில்லை.

ஊர்வந்தான் வழிப்போக்கன். பையைக் காணேம். முகம் சிறுத்தது. 'ஆஹா! நாம் விறகுவெட்டியைப்பற்றி அவ்வளவு பெருமையாகப் பேசினேம். அங்குதான் தவறியிருக்கவேண்டும். கெட்டிக்காரன் புளுகு, எட்டு நாளில் என்பார்கள். இதோ அவர்களது யோக்கியதையைப் பார்த்து விடுகிறேன், எனச் சபதங் கொண்டான்.

புறப்பட்டு காற்றினும் வேகமாக வந்தான் வழிப்போக்கன். அதே குடிசைக்குள் சென்ருன். விறகுவெட்டி பதின்மடங்கு அன்புடன் உபசரித்தான். வந்த காரியத்தை வழிப்போக்கன் அறிவித்தான். உடனே விறகு வெட்டியின்மகன் வழிப்போக்கனை குடிசையினின்றும் இருநூறு கஜம் அழைத்துப்போனுன். ஒரு புதர் கல்மூடியிருந்தது. திறந்தான் பையன். இருந்தது பணப்பை. மலர்ந்தது விருந்தினன்முகம். அப்போது பையன் 'பெரியோரே, அன்று தாங்கள் குடிசையைவிட்டுச் சென்ற சில நிமிஷங்கட்கெல்லாம் இப்பை என் கண்ணில் தென்பட்டது. என் பொருளில்லாததை யான் வீட்டிற்கு கொண்டு வருவதில்லை. ஆகவே, பையை இங்கு மறைத்துவைத்து ஒருவரும் எடுக்காதபடி பாதுகாத்து வந்தேன். இன்று என்மனதிலுள்ள பளு நீங்கிற்று. உரிமையாளரிடம் பொருள் சேர்ந்தது. மனம் சாந்த மடைந்தது' என்ருன்.

உடனே ஆகாயத்தினின்று ஒருசொல் கேட்டது. அதாவது பிறர்பொருளை விரும்பாதவனுக்குத்தான் பரம்பொருளினருள் கிட்டும் என்பது. நின்ற வழிப்போக்கனைக் காணோம். பையன் ஆகாயத்தைப் பார்த்தான். ஒன்றுந் தெரியவில்லை.

குடிசைக்குப் போனான். அது ஒரு மாளிகையாய் நின்றது. அங்கு அவன் தகப்பன் "தம்பி, உன் நல்லெண்ணமே, கடவுளின் அருட் செல்வத்தைத் தந்தது. எல்லாம் அவன் செயல். அவனன்றி ஓர் அணுவும் அசையாது." எனச் சொல்லிக்கொண்டே பையனை மாளிகைக்குள் அழைத்துச்சென்றனன். பல காலம் தந்தையும், தனயனும் இன்புற்று வாழ்ந்தனர்.

Edited & Published by K.S. Venkataramani at No. 43, Mahadana Street, Mayavaram, Printed by V. Ramamurthi B. A., at the Mirasdars' Welfare Press 29, Mahadana Street, Mayavaram.